# பார்வைக்கு ....


| | | |
|---|---|---|
| சஞ்சிகை | : | இளவேனில் |
| இரண்டாம்பதிப்பு | : | ஆடி 2012 |
| வெளியிடுவோர் | : | கேசி தமிழ் மன்றம் |
| வடிவமைப்பு | : | ஆசிரியர் குழு |
| அச்சுப்பதிப்பு | : | யுனி ஆட்ஸ் |
| தொடர்புகட்கு | : | கேசி தமிழ் மன்றம்<br>PO Box 2516,<br>Fountain Gate, Vic - 3805,<br>Australia<br>info@caseytamilmanram.org.au |


## பொருளடக்கம்


| ஆக்கம் | வகை | பக்கம் |
|---|---|---|
| ❒ தொகுப்புரை | | ................. 02 |
| ❒ தலைவரின் உள்ளத்திலிருந்து..... | | ................. 03 |
| ❒ மற்றவரின் உணர்ச்சிக்கு மதிப்புக் கொடு | பத்தி எழுத்து | ................. 04 |
| ❒ இலையான்! | சிறுகதை | ................. 06 |
| ❒ நான் கண்ட அவுஸ்திரேலியா | கட்டுரை | ................. 09 |
| ❒ மறத்தமிழர்! | கவிதை | ................. 11 |
| ❒ கிரிக்கெற் | சிறுகதை | ................. 12 |
| ❒ வெறுங்கனவு | கவிதை | ................. 14 |
| ❒ மாதா கோயில் மணியோசை | சிறுகதை | ................. 16 |
| ❒ என் நாடு எனக்கு இருந்தால் | கவிதை | ................. 17 |
| ❒ ஆடி.......... நீ.........ஆடி வாராயோ.......... | பத்தி எழுத்து | ................. 18 |
| ❒ ஆடிப்பிறப்பு | பத்தி எழுத்து | ................. 19 |
| ❒ நண்பரைப் பெறுதல் | பத்தி எழுத்து | ................. 20 |
| ❒ அம்மா | கவிதை | ................. 23 |
| ❒ கவிதை சொல்லும் படங்கள் | கவிதை | ................. 24 |
| ❒ இடப்பெயர்வு | சிறுகதை | ................. 25 |
| ❒ இரவின் மடியில் | கவிதை | ................. 27 |
| ❒ "கள்ளனும் பொலிசும்" | சிறுகதை | ................. 28 |
| ❒ வசந்த காலப் பொழுதுகள்..! | கவிதை | ................. 30 |
| ❒ தமிழில் குழந்தை இலக்கியம் | கட்டுரை | ................. 31 |
| ❒ ஒரு குழந்தை வளர்கிறது | சிறுகதை | ................. 33 |
| ❒ நாளை வரும் | கவிதை | ................. 35 |
| ❒ சிதைந்த ஓவியம் | சிறுகதை | ................. 36 |
| ❒ அன்பு என்றால் | பத்தி எழுத்து | ................. 39 |

# இளவேனில் 2

## வணக்கம்

கேசி தமிழ் மன்றத்தின் இளவேனில் சஞ்சிகை அவுஸ்திரேலியாவிலுள்ள எழுத்தாளர்கள், கதை சொல்லிகள், பத்தி எழுத்தாளர்கள் என்று பலரின் ஆக்கங்களையும் சுமந்து வெளிவருகிறது.

ஒரு ஆரோக்கியமான தமிழ் வளர்ச்சிக்கும் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் இளையோரின் எழுத்தாற்றலையும் ஊக்குவிக்க வேண்டும் என்ற எமது அவாவை மனதில் கொண்டு அதற்கான முயற்சிகளைச் செய்கிறோம்.

எமது இந்த முயற்சிக்கு படைப்பாளிகள் தங்களின் பங்களிப்பை எதிர்காலத்திலும் பயனுள்ள விதத்தில் தந்துதவும் வண்ணம் வேண்டுகிறோம்.


ஆக்கப்படைப்பாளிகளே! எமது இளவேனில் சஞ்சிகையில் உங்கள் ஆக்கங்களைப் பிரசுரிப்பதற்கு ஏற்ற வகையில் காலக்கிரமத்தில் கிடைக்கும் வண்ணம் தந்துதவ வேண்டுகிறோம்.

அரையாண்டு சஞ்சிகையாக வெளிவரும் இளவேனில் காலாண்டு சஞ்சிகையாகவோ மாத சஞ்சிகையாகவோ இனிவரும் காலங்களில் வெளிவரலாம்.

காலவேகத்தின் ஓட்டத்தில் கலையும் இலக்கியமும் ஒன்றாகிப் பயணிப்போம்.

நன்றி

**ஆசிரியர் குழு.**



# தலைவரின் உள்ளத்திலிருந்து...

கடந்த தைத்திருநாளில் சிறுவர் சிறப்பிதழாய் கன்னிப் பதிப்பு பெற்ற இளவேனிலின் இரண்டாவது இதழ், இன்று ஆடிப்பிறப்பு வெளியீடாக ஆஸ்திரேலியாவில் வாழும் கலை இலக்கியப் படைப்பாளிகளின் ஆக்கங்களைத் தாங்கி ஓர் முழுமையான இதழாய் வெளிவருகின்றமை குறித்து நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். பல படைப்பாளிகளின் உற்சாகமான பங்களிப்பும் எமது ஆசிரியர் குழுவின் அயராத உழைப்பும், இனி வரும் காலங்களில் இளவேனில் தொடர்ந்து வெளிவந்து புலம்பெயர் ஆக்க இலக்கியத் துறையின் வளமூட்டலுக்கு காத்திரமான பங்களிப்பை நல்குவதோடு புதிய பல திறமைகளை எம் சமூகத்திற்கு இனங்காட்டும் எனும் உறுதியான எண்ணத்தை உருவாக்கியிருக்கின்றது.

இத்தருணத்தில், இரண்டாவது ஆடிப்பிறப்பு விழாவை இன்று காணுகின்ற கேசி தமிழ் மன்றம், இங்கு வாழும் தமிழ் சமூகத்தின் ஒருங்கிணைப்பிற்கும் மேம்பாட்டிற்கும் வலுச்சேர்க்கின்ற பல செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்கின்றது என்கின்ற செய்தியையும் உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். 2010 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் தமிழ் மூத்தோர் நலன் பேணல் - தமிழ் மொழி கலாச்சாரம் என்பவற்றை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லுதல் - தமிழ் சார்ந்த ஆக்க முயற்சிகளுக்கு களம் அமைத்துக் கொடுத்தல் - பல்லின கலாச்சார சமூக அமைப்பிற்கு வலுச்சேர்த்தல் உட்பட்ட நல்ல பல நோக்கங்களோடு உதயமாகிய எம் மன்றம் ஆக்கமும் ஊக்கமும் மிக்க தன்னார்வலர்களின் உழைப்பினால் இன்று நல்லதோர் சமூக நிறுவனமாக வளர்ச்சி கண்டிருக்கின்றது.

எம் மன்றத்தின் வளர்ச்சிக்கும் இளவேனிலின் தொடர்ந்த மலர்விற்கும் உங்களின் ஆக்கபூர்வமான ஆலோசனைகளும் ஆர்வம் மிக்க பங்களிப்பும் இன்றியமையாதவை. உங்களின் அரவணைப்பில் கேசி தமிழ் மன்றம் மென்மேலும் வளரும் - அதன் செயற்பாடுகள் மேலும் மெருகுறும் எனும் நம்பிக்கையோடு, இளவேனிலின் இப்பிரசவத்திற்கு கைகொடுத்த அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி

**கு. சிவசுதன்**
தலைவர்
கேசி தமிழ் மன்றம்

# மற்றவரின் உணர்ச்சிக்கு மதிப்புக் கொடு

கலைவளன்
சிசு.நாகேந்திரன்

மனித உணர்ச்சியானது இரண்டு வகைப்படும். ஒன்று உடலுணர்ச்சி, மற்றது அகஉணர்ச்சி. ஐம்புலன்களில் ஒன்றின் அல்லது பலவற்றினூடாக உடம்பில் ஏற்படும் உணர்ச்சி உடலுணர்ச்சியாகும். உதாரணமாக - வாயினால் ரசித்துச் சாப்பிடும்பொழுது வருவது ஒருவித உணர்ச்சி. காதினால் இனிமையான பாட்டைக்கேட்டு ஆனந்தமடைகிறோம். அது இன்னொரு உணர்ச்சி. அவ்விதமே மற்ற மூன்று புலன்களும் எம்முடலுக்கு வெவ்வேறு உணர்ச்சிகளை ஊட்டுகின்றன.

அகஉணர்ச்சியானது மனச்சாட்சி, பகுத்தறிவு, இரக்கம், நீதி, அறம் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டதாகும்.

மனிதனின் சொல்லும் செயலும் அவனது உள்ளத்திலிருந்தே உதிக்கின்றன என்பது நியதி. மனம் வாக்கு காயம் இம்மூன்றும் ஒரே அலைவரிசையில் இயங்க வேண்டுமென்பது தான் புத்திஜீவிகளின் கருத்து. அதாவது ஒரு மனிதனுடைய எண்ணம், சொல், செயல் என்பவை ஒன்றுக்கொன்று முரண்படாமல் ஒரே நோக்கத்தைக் கொண்டவையாக அமைய வேண்டும். அவற்றில் ஒன்றுக்கொன்று பிறழ்ந்தால் அங்கு பண்பும் நேர்மையும் தவறிவிட்டன, ஏதோ கபடமிருக்கிறது என்பதை அனுமானிக்கலாம்.

மற்றவரின் உணர்ச்சிக்கு மதிப்பு கொடுத்தல் மிகவும் அவசியம். நாம் சொல்லும் சொல் அல்லது எமது செயல் மற்றவரை எவ்வகையில் பாதிக்கும்? அது அவரது உணர்ச்சியில் என்ன தாக்கத்தை ஏற்படுத்தும்? அவர் அதை வரவேற்பாரா அல்லது அதற்கு எதிர்ப்பு காட்டுவாரா? என்பவற்றை முன்கூட்டியே கவனித்துத்தான் நமது எண்ணங்களுக்குச் சொல்லுருவம் கொடுத்தல் வேண்டும். வாய்திறந்து பேசமுன்னரே சற்று சிந்திக்கவேண்டும். மாறாக, எமது நல்ல சொற்கள் நல்ல விளைவை உண்டாக்கவும்கூடும். அவை அவரது மனதில் சந்தோஷத்தை ஏற்படுத்தும். நாம் சொல்லும் சொற்கள் நன்மை பயக்கும், அவர் அவற்றை வரவேற்பார் என்று எமது மனதிற்பட்டால் அவற்றைச் சொல்லத் தயங்கக்கூடாது.

உங்களைக் காண ஒரு நண்பன் வரும்பொழுது கையில் ஏதோ உணவுப் பண்டம்கொண்டுவந்து தருகிறார் என்று வைத்துக்கொள்வோம். அன்றிரவு நீங்கள் அதைச் சாப்பிடுகிறீர்கள். அதன் ருசி உங்களுக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. ஏதோ கொஞ்சத்தை விருப்பமில்லாமல் முண்டிவிழுங்கிவிட்டு மிச்சத்தை குப்பைத் தொட்டிக்குள் போட்டுவிடுகிறீர்கள். அடுத்த நாள் அவர் சாப்பாடு எப்படி, ருசியாக இருந்ததா என்று கேட்டால் சாப்பாடு உதவாது என்று சொல்லுவீர்களா? சொல்லத்தான் மனம்வருமா?

ஆகவே, மற்றவருக்கு மனத்தாங்கல் ஏற்படுத்தும் சொற்களை வாய்திறந்து சொல்லாமல் விடுவதே நலமளிக்கும். அந்தக் கொள்கையைக் கடைப்பிடித்தால் அது மனிதருக்கிடையில் பரஸ்பர அன்பு, பாசம், நம்பிக்கை இவைகளை ஏற்படுத்தும்.

மற்றவர்களின் உணர்ச்சிக்கு மதிப்புக்கொடு என்பதைத் திரும்பவும், அடித்துக் கூறுகிறேன். மனஉணர்ச்சியானது மிகவும் மெதுமை-யானது. மனிதர்கள் ஒருவரோடொருவர் புழுங்கும்பொழுது ஒருவரின் வாய்ச்சொற்களால்

மற்றவருக்கு ஏற்படக்கூடிய பாதிப்பை அவர் கவனிக்கவேண்டும், அதை மதிக்கவேண்டும். வேண்டுமானால் பேசவேண்டியதை மனதில் முதலில் ஒத்திகை பார்த்துக்கொள்ளலாம். சொல்லப்பட்ட சொற்கள் நல்லனவா அல்லது கெட்டனவா என்பதை அதைக் கேட்டவரின் மனஉணர்ச்சிப் பிரதிபலிப்பிலிருந்து, அவரின் முகபாவத்திலிருந்து அறியலாம். மேலும், ஒருவர் பேசும் சொற்கள் வெவ்வேறு மனங்களில் வெவ்வேறு விதமான தாக்கத்தை உண்டாக்கக்கூடும். அதையும் கவனித்துப் பேசவேண்டும்.

மற்றவர்களின் பேச்சைப்பற்றி அல்லது செயலைப்பற்றி விமர்சிக்காமல் விடுவது நன்மை பயக்கும். இகழ்ந்து விமர்சிப்பது தீங்கை விளைவிக்கும். புகழ்ந்து விமர்சிப்பது சமூக உறவுக்கு வலுச்சேர்க்கும்.

சரித்திரங்களில் படித்திருக்கிறோம், ஒரு மனிதனின் வாய்ச்சொற்களின் பலனாக உலக மக்கள் பலர் நன்மையடைந்திருக்கிறார்கள். அன்றி, வேறொரு தலைவனின் தீய கட்டளைகளின் பலனாக எத்தனையோ மக்கள் துன்பத்துக்கு ஆளானதை நாம் அறிவோம்.

நாம் சொல்லும் வார்த்தை ஒவ்வொன்றும் மற்றவர் மனதில் என்ன தாக்கத்தை உண்டுபண்ணும் என்பதை உணர்ந்து அவதானமாகப் பேசுவதே மனிதர்களிடையே ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் வழிவகுக்கும்.

*யாகாவாராயினும் நா காக்க - காவாக்கால்*
*சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு*

**-திருவள்ளுவரின் தமிழ்மறை.**

## பயனுள்ள குறிப்புகள்

- கல்வி என்பது கலப்பையைப் போன்றது. அது அறிவு என்னும் நிலத்தை ஆழ உழுது பயன்படக்கூடியது. ஊறிவரும் ஊற்று நீர் போன்றது.

- மறத்தலும் மன்னித்தலும் மனிதருக்கு மனிதர் அவர்தம் மனதுக்கு மனம் வேறுபடும்.

- மண்மீது அழுந்திய சுவடுகள் மறைந்துவிடும். மனதில் பதிந்த சுவடுகள் என்றும் மறைவதில்லை.

- சினிமாவோ, அரசியலோ, வணிகமோ, உத்தியோகமோ எந்தத் துறையிலும் ஒருவர் ஈடுபட்டு, அவருடைய நற்காலத்தின் உச்சக்கட்டத்தில் உலாவும்போது, நனைந்த கண்ணாடியின்மீது நடப்பதுபோல அவ்வளவு கவனமாக ஒவ்வொரு அடியையும் எடுத்துவைத்து மிக எச்சரிக்கையாக நடக்கவேண்டும்.

- புத்தியில் நான்குவகை உண்டு:- கற்பூரப்புத்தி, கரிப்புத்தி, அரக்குப்புத்தி, கதலிப்புத்தி.

# இலையான்!



ஜே.கே

"உணவுச்சங்கிலி என்பது சுற்றாடலில் உள்ள .."

அரியலிங்கம் வலது கைக்காரர். இடது கை கரும்பலகையில் விறுவிறுவென்று எழுதிக்கொண்டிருக்கும் போதே, வலதுகை லோங்க்ஸ் பொக்கெட்டில் வறுவறுவென்று சொறிந்து கொண்டிருக்கும். ரிவிரச ஒபரேஷன் முடிந்த 'கையுடன்' கழுத்தடியில் ஜெயசிக்குறு ஒபரேஷன் ஆரம்பிக்கும்.

நீங்கள் மைதானம் பக்கம் உள்ள மிடில் ஸ்கூல் கழிப்பறைக்கு ஒதுங்கினால், கிழக்கேயிருந்து சரியாக நான்காவது அறையின் உள்கூரையில் "சொறியலிங்கம் ஒருசொறி..." என்று கரித்துண்டால் எழுதப்பட்டு, மிகுதிப்பகுதி, மாஸ்டரின் யாரோ ஒரு ஆஸ்தான மாணவனால் அழிக்கப்பட்டு இருப்பதைக் கவனிக்கலாம். பக்கத்திலேயே முருகானந்தம் மிஸ்ஸின்..

"சேர்"

என்று யாரோ கூப்பிட, மாஸ்டர் திரும்பி பார்க்காமலேயே சொன்னார்.

"ஐஞ்சு நிமிஷம் தான்... டக்கென்று போயிட்டுவரோணும் ..அங்கனக்க இழுபட்டுகொண்டு திரிஞ்சாய் எண்டால் இழுத்துப்போட்டு அறுப்பன்"

சொல்லிக்கொண்டே தொடர்ந்து எழுத ஆரம்பித்தார்.

"உயிரினங்களுக்கு இடையிலான உணவுத் தொடர்பை விளக்குகிறது.."

"சேர்.."

இம்முறை கொஞ்சம் அழுத்தமாகவே கூப்பிட, மாஸ்டர் திரும்பிப் பார்த்தார். மூன்றாவது வரிசையில் இருந்த மயூரன்தான்.

மயூரன் வகுப்பில் பெரும் கெட்டிக்காரன் கிடையாது. முதலாம் தவணை என்றால் தட்டுத்தடுமாறி பத்தாம் பிள்ளைக்குள் வந்துவிடுவான். இரண்டாம் மூன்றாம் தவணைகள் கொஞ்சம் டைப்படித்து பன்னிரெண்டு பதினைந்து என்றாகிவிடும். அழுத்தக்காரன். அப்பா வைத்தி, கல்வியங்காட்டு சந்தையில் தேங்காய் கடை வைத்திருக்கிறார். ஞாயிற்றுகிழமையானால் இவனும் போய் கடையில் உட்கார்ந்துவிடுவான். கணக்கு பாடம் கொஞ்சம் செய்வான். அதிலும் சிட்டை கணக்கு ஒரு நாளும் பிழைக்காது.

சோக்கட்டியை மேசையில் போட்டுவிட்டு மயூரனிடம் நெருங்கினார் மாஸ்டர்.

"என்ன பிரச்சனை?"

"சேர் வந்து... நேத்து மந்திலி பரீட்சை பேப்பர் திருத்தி தந்தனிங்களல்லோ"

"அதுக்கென்ன?"

மாஸ்டரின் இரண்டு கைகளும் இப்போது இரண்டு பொக்கெட்டுகளிலும் நுழைந்திருந்தது. ஆனையிறவிலிருந்தும் மாங்குளத்திலிருந்தும் இருமுனைகளை திறந்து கொண்டு ஸ்ரீலங்கா இராணுவம்ஜெயசிக்குறு நடவடிக்கையை ஆரம்பித்திருந்தது.

"அதில இலையானுக்கு எத்தனை கால்கள்? எண்ட கேள்விக்கு நான் ஆறு எண்டு போட்டிருக்கிறன். நீங்க பிழை போட்டிருக்கிறீங்க"

"எந்த ஊரிலையடா இலையானுக்கு ஆறுகால்? அதுக்கு சரியான ஆன்சர் எட்டுதான்.. பேசாமகிட"

"இல்ல சேர்... எனக்கு வடிவா தெரியும் ..இலையானுக்கு ஆறுகால்தான்"

மாஸ்டருக்கு சரக்கென்று கோபம் வந்தது.

"நீ எனக்கு படிப்பிக்கப் போறியோ? அதெல்லாம் எட்டு கால்தான் .. வேணுமெண்டா லைப்ரரில போய்பார்"

"இல்லசேர் ..அடிச்சு சொல்லுறன் .. ஆறுதான்"

மயூரன் தொடர்ந்து அழும்புபிடிக்க, மாஸ்டருக்கு இப்போது கோபம் தலைக்கேறி, கடகடவென்று மேசைக்கு போனார். அங்கே இருந்த கிளுவை தடியை எடுத்துவந்து,

"கையை நீட்டு ..எங்க இப்பசொல்லு .. இலையானுக்கு எத்தனைகால்"

"... அம்மானை... ஆறுசேர்"

"படீர்" என்று மயூரனின் கையில் அடிவிழுந்தது."அம்மா" என்று கத்திக் கொண்டே சடக்கென்று கையை உதறினான் மயூரன், கண்கள் இலேசாக கலங்கிவிட்டது அவனுக்கு.

"எங்க பார்ப்பம் ..இப்ப எத்தினை கால் எண்டு .. "

"இல்ல.. சேர் ..வீட்டில .."

"சுளீர்" என்று இம்முறை சுருதி மாறியது. கிளுவை நுனி இலேசாக வெடித்து வழுக்கல் சிதறி பக்கத்து கதிரை சஞ்சீவன் முகத்தில் தெறித்தது. மயூரன் இன்னமும் உதறிக்கொண்டே கதறினான்.

"செல்லம் ..இப்பசொல்லுங்கோ இலையானுக்கு எத்தினை கால்கள்?"

"எட்டு சேர்.."

"வடிவாகேக்கேல்ல, வகுப்பில எல்லோருக்கும் கேக்கோணும் எங்க கத்தி சொல்லு பார்ப்போம்..ஆ இலையானுக்கு"

"..இலையானுக்கு மொத்தமாக ..எட்டு ..கால்கள் சேர்"

மயூரன் அழுது கொண்டே சொன்னான்.

"தேங்காய் லோட் ஏத்திறதுகள் எல்லாம் கேள்வி கேட்க வெளிக்கிட்டிதுகள்.. இதுகளுக்கு அடி உதவிறது போல அண்ணன் தம்பி உதவாங்கள்"

சொல்லிக்கொண்டே அரியலிங்கம் மாஸ்டர் கரும்பலகைக்கு போனார்.

"சூழலில் ஒரு இனத்திலிருந்து இன்னொன்றுக்கு உணவும் சக்தியும் கடத்திச செல்லப்படுவதை"..ஜெயசிக்குறு ஒப்ரேஷனில் இராணுவம் மீண்டும் முன்னேற ஆரம்பித்திருந்தது.

---------------------------------

"என்னசேர், என்ரபெடியனுக்கு நேற்று அடிச்சுப்போட்டியலாம்?"

அடுத்தநாள் வகுப்பில் வைத்தி திடும் என்று இப்படி வந்து நிற்பார் என்று அரியலிங்கம் மாஸ்டர் கனவிலும் நினைத்திருக்கமாட்டார். பாடசாலை வருவதற்காக வைத்தி கட்டியிருந்த புதுசாரம் படக்படக் என்று பொங்கியிருந்தது. உரிக்க முயன்றும் முடியாமல் போன ஸ்டிக்கரில் கிப்ஸ் பிராண்ட் இன்னமும் வெளித்தெரிந்தது. மேலுக்கு நீலக்கலரில் மார்டின் சேர்ட், இரண்டு பட்டன்கள் போடாமல் கிடக்க, கழுத்தில் தொங்கிய செயின், தேங்காய் ஏன் எண்பது ரூபாய்? என்பதற்கு விளக்கம் கொடுத்தது. மாஸ்டருக்கும் வைத்தியின் கடையில் தனக்கிருக்கும் அக்கவுண்ட் ஞாபகம் வர,

"என்ன வைத்தி இதுக்கு போய் இவ்வளவு தூரம் வந்தியா? இவன் பெடியன் ஒரு கேள்வி பிழையா சொல்லி.."

"இலையானுக்கு மெய்யாலுமே எத்தினைகால் சேர்?"

"இதென்ன கதை ..பூச்சிக்கு எல்லாம் எட்டு கால்தான் .. இலையான் எண்டா என்ன ..நுளம்பு எண்டா என்ன? எல்லாத்துக்கும் ஒண்டுதான்"

மாஸ்டருக்கு இப்போதுதான் முதன் முதலாக டவுட் வந்தாப்போல இருந்தது. மாஸ்டர் புங்குடுதீவில் எஸ் எஸ் ஸி பாஸ் பண்ணி, டொக்டராகும் ஆசையில் ஸ்கந்தாவரோதயாவில் இங்க்லீஷ் மீடியம் சேர்ந்து பார்த்தார். கல்லு நகரவில்லை. மூன்றாம் தடவையில் ஏஎல் மூன்று பாடம் ஒரு வழியாக பாஸ் பண்ணி, ஓரெட்டர் சுப்ரமணியம் கொடுத்த சிபாரிசு கடிதத்தால் சைன்ஸ் மாஸ்டர் ஆனவர்.

"டேய்தம்பி ..அந்த இலையானை எடுத்துகாட்டுடா"

வைத்தி மயூரனுக்கு சொல்ல, மயூரன் தன் பொக்கெட்டில் இருந்த நெருப்பு பெட்டியை எடுத்து கவனமாக திறந்தான். உள்ளே ஒரு இலையான் ஓரளவுக்கு பெரிய இலையான். அடிபட்டு செத்துப்போய்கிடந்தது.

“சேர் வடிவா பாருங்கோ ..அடிச்ச அடில ஒரு கால் உடைஞ்சு தொங்குது. ஆனாலும் ஆறுகால்தான்”

மயூரன் சொல்ல சொல்ல, மாஸ்டருக்கு சாதுவாக வியர்க்க ஆரம்பித்தது. கையை பொக்கட்டில் இருந்து வெளியே எடுத்தார். இந்த இருபத்தி ஐந்து வருட எக்ஸ்பீரியன்ஸில் ஒரு இலையான் கூட இந்த காட்டு காட்டியதில்லை. இன்றைக்கு செத்த இலையான் ஒன்று மாஸ்டருக்கு தண்ணிகாட்டுகிறது.

“இல்ல ..இதுவந்து .. நீங்க அடிச்ச அடில மற்றரெண்டு காலும் அடிச்ச இடத்திலேயே உடைஞ்சு ஒட்டியிருக்கும்..அதோட இந்த இலையான் உண்மையிலேயே இலையான் வகை இல்லை .. இது ஒரு பூச்சிவகை .. தென்னை மரத்தில...”

மாஸ்டர் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே மயூரன் தன்பையிலிருந்து ஒரு ஷொப்பிங் பாக்கை இப்போது வெளியே எடுத்தான். பாக்கின் உள்ளே இருபது முப்பது இலையான்கள். குற்றியுரும் குறையுயிருமாய் ஊர்ந்துகொண்டிருந்தது. சின்னதும் பெரிதுமாய்

“நேற்று பின்னேரம் முழுக்க இவனுக்கு இதான் வேலை சேர். டியூஷனுக்கும் போக இல்லை. ஒரு அடிமட்டத்தை எடுத்து கண்ட இலையான் எல்லாத்தையும் அடி அடி என்று அடிச்சு, பத்தாம தேங்காய் கடைக்கும் வந்திட்டான். சந்தையடியிலையும் விசாரிச்சம் சேர் .. ஆறுகால்தானாம்..”

மாஸ்டர் தான் சுற்றி வளைக்கப்பட்டிருப்பதை உணர்ந்தார். இனிதப்ப முடியாது. “இலையானுக்கு நிஜமாகவே ஆறு கால்தான் போல. ஐயோ, இவன் வைத்தி கொம்ப்ளைன் பண்ணினால் பிரின்சி நாயாய் குலைக்குமே” என்று யோசிக்க மாஸ்டருக்கு கொஞ்சம் நடுக்கமும் தொடங்கியது.

“இல்லை வைத்தி அது மார்க்கிங் ஸ்கீம்ல அப்பிடித்தான் இருக்கு. இலையான் எண்டுறது துடிப்டேரா எண்ட விஞ்ஞான குடும்பத்தைச் சேர்ந்த பூச்சி .. எட்டு கால் தான் இருக்கோணும். எதுக்கும் நான் மற்ற சயன் ஸ்டீச்சர்மாரோடையும் கதைச்சிட்டு செய்யுறன். உண்மையிலேயே இலையானுக்கு ஆறுகால்தான் என்றால் கோட்டக் கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பி எடுக்கோணும். சிலபஸ் மாத்தோணும். நீ யோசியாத .. நான் சரியா திருத்தி கொடுக்கிறன்”

மாஸ்டர் டிப்டேரா, கோட்டக்கல்வி, சிலபஸ் என்று வைத்திக்கு புரியாத பாஷையில் விளக்கம் கொடுத்து சமாளித்தார்.

“என்னத்த சீலம்பாய் டிப்டேரா, அறுந்த இலையானுக்கு எத்தினை கால் எண்டு கூடத் தெரியாத படிப்பு... ”

புலம்பிக் கொண்டே வைத்தி புறப்பட, மாஸ்டர் வகுப்பறையை திரும்பிக்கூட பார்க்காமல் நேரே கரும்பலகைக்கு போனார்.

“கதையை விட்டிட்டு எழுதுங்கடா..... விலங்குகளில் தாவர உண்ணி, விலங்கு உண்ணி, அனைத்தும் உண்ணி என்று ..”

ஜெயசிக்குறு நடவடிக்கை மீள ஆரம்பிக்கத் தொடங்கியது. மெதுவாகவும் பலமாகவும். வறு.. வறு...வறு...

“படீர்”

“என்னடா அங்க சத்தம்?”

..

“சரியான இலையான் சேர்”

*புதுமைகள் புரிந்த காலம் போய்*
*முதுமை வந்து உடலும் உள்ளமும் தளர்ந்த பின்னர்*
*சக்தியும் புத்தியும் தடுமாறுகின்றன.*

# நான் கண்ட அவுஸ்திரேலியா

## மதுரா சுப்ரமணியம்

எனது பெயர் மதுரா சுப்ரமணியம் நான் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்டிருந்தபோதும் தமிழ் நாட்டில் சில காலம் வாழ்ந்து இன்று சில மாதங்களுக்கு முன் அவுஸ்திரேலியாவில் குடியேறினேன்.

தமிழ் மக்களின் புலம் பெயர் வாழ்வைப் பற்றி பலவாறு கேள்விப்பட்டாலும் நான் இங்கு வந்து பார்த்தபோது எமது மக்கள் தமிழையும் சமயத்தையும் கலை கலாச்சார நிகழ்வுகளையும் சிறந்த முறையில் வளர்ப்பதற்கு தமது பங்களிப்பினை அர்ப்பணிப்புடன் செய்வதைப் பார்த்து நான் நெகிழ்ந்து போகிறேன்.

தமிழை வளர்க்கவும், எழுதப் படிக்கவும் அதனை ஒரு பாடமாக வீ.சீ.ஈ பரீட்சையில் தோற்றவும் அவுஸ்திரேலியா அரசு வழி செய்து கொடுத்திருக்கிறது. இதை எண்ணும் போது தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவ வேண்டும் என்ற பாரதியாரின் பெயரிலேயே டண்டினொங்கில் பாரதிப் பள்ளி வளாகத்தை திரு. மாவை நித்தியானந்தன் அவர்கள் அரும்பாடுபட்டு அமைத்து 22 வருடங்களாக நடாத்தி வருகின்றார்கள்.

டண்டினொங் வளாகத்தில் கடந்த மாதம் நானும் இணைந்து கொண்டபோது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அவுஸ்திரேலியா நாட்டில் பிறந்த குழந்தைகளும், சிறுவர்களும் தமிழ் படிக்க வருவதைப் பார்த்தேன். தமிழ் நாட்டில் இருந்து வந்த நான் தமிழ் நாட்டிலேயே தமிழை படிக்கவும் எழுதவும் தெரியாத தமிழர்களைப் பார்த்த எனக்கு இங்கு இதைப் பார்த்தபோது ஆச்சரியப் படாமல் இருக்க முடியவில்லை.

தேமதுர தமிழோசை உலகமெல்லாம் பரவ வேண்டும் என்று கனவு கண்ட பாரதியாரின் கனவு ஓரளவுக்காயினும் நனவாகி இருக்கிறது.

தமிழராகிய நாம் சென்ற இடமெல்லாம் எம்மோடு மொழி, கலை கலாச்சாரம், பண்பாடு என்று எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு போவதோடு அவை அழியாமல் பாதுகாக்க முயற்சிப்போம் என்பதற்கு நான் கண்ட அவுஸ்திரேலியா ஒரு உதாரணம். இங்கு வந்து எமது முன்னோர் செய்திருக்கும் பணிகளை நான் பார்த்த வரையில் பார்ப்போம்.

கலைகளையும் பக்தியினையும் வளர்க்க நல்ல கோயில்கள் செய்திருக்கிறார்கள்.

தமிழை வளர்க்க தமிழ்ச் சங்கங்கள் அமைத்து பாடசாலைகளை நிறுவி தமிழை வளர்க்கின்றார்கள்.

பாரதிப் பள்ளி நிர்வாக இயக்குனர் திரு. மாவை நித்தியானந்தன் அவர்கள் உண்மையிலேயே போற்றப்பட வேண்டியவர். அவருடைய பல வருட உழைப்பு இன்று நிமிர்ந்து நின்று என்னைப் போன்றோரையும் தமிழ் படிக்க இடம் தந்து எமது மொழியை அழியாது காத்து நிற்க வழி செய்து இருக்கின்றார். அவரின் பணியைத் தொடர்ந்து அவர் காணும் கனவையும் என் போன்ற மாணவர்கள் நிறைவு செய்ய வேண்டும். அதோடு தமிழை வளர்க்க உறுதுணையாக நிற்கும் டண்டினொங் வளாக அதிபர், ஆசிரியர்களும் பாராட்டப்பட வேண்டியவர்களே.

அத்தோடு தமிழுக்கும் கலைக்கும் பணி செய்ய இங்கு இயங்கிக் கொண்டிருக்கும் நடனப் பள்ளிகள், சங்கீத வகுப்புக்கள், இசைக் கருவிகளை கற்பிப்போரைப் பார்த்து நான் பிரமித்துப் போகின்றேன். தமிழை வளர்க்கும் பணியில் பல மாநில மாகாண வானொலிகளின் பங்கும் பாராட்டுதலுக்குரியது.

இக் கட்டுரையை சமர்ப்பிக்க எனக்கு சந்தர்ப்பம் தந்த எழுத்தாளர் மகாநாட்டில் ஒரு வருத்தமான செய்தியையும் முன் வைக்கின்றேன்.

தமிழைப் பாடமாகப் படித்து வீ.சீ.ஈ இறுதிப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் பெறுபேறுகள் சரியான முறையில் வழங்கப்படுவதில்லை என்பதையும் பரீட்சைத்தாள் திருத்துபவர்கள் சரியாக நேர்த்தியான வகையில் நடந்து கொள்ளவில்லை எனவும் கேள்விப்பட்டபோது மனதில் சிறு கவலை என்னுள் எழுந்தது. இதை இந்த சபையில் இருக்கும் பெரியோர்களின் கவனத்திற்கு சமர்ப்பிக்கிறேன். எதிர்காலத்தில் என் போன்று தமிழைப் படிக்க வரும் மாணவர்களின் எதிர்பார்ப்பை கவனத்தில் எடுக்கும்படி மிகவும் தாழ்மையுடன் கூறிக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கின்றேன்.

நன்றி

(எழுத்தாளர் விழா 2012 மாணவர் அரங்கில் வாசிக்கப்பட்ட கட்டுரை)

## சிந்தனைத் துளிகள்

- ❖ காகத்தின் குணம் மனிதனுக்கு இருந்தால்தான் அவன் மதிக்கப்படுவான். (பகிர்ந்துண்ணும் குணம்)
- ❖ கழுதை விழிவிசேடத்துக்கு நல்லது, ஆனால் அது கத்தினால் பிடிக்காது.
- ❖ அகப்பை பிடிக்கும் கைதான் ஆண்களை ஆள்வது.
- ❖ பந்தமும் பாசமும் பணமிருக்கும் மட்டும்தான்.
- ❖ பணமில்லாதவனைப் பரத்தையரும் பாரார்.
- ❖ கிட்ட இருந்தால் முட்டப்பகை. தூர இருந்தால் பகைவரும் உறவர்.
- ❖. தான் படைப்பதிலும் பார்க்க மற்றவன் படைப்பது ரசனை கூட. (உதாரணம் - சாப்பாடு)
- ❖ புத்தகத்தை வாசித்துவிட்டு மறப்பதைவிட, ஒரு வரியை வாசித்து அதன்படி நடப்பதே மேல்.
- ❖ துன்பம் வரும்போது கடவுளை அழைக்கிறோம். இன்பம் அனுபவிக்கும்போது கடவுளை நினைப்பதுண்டா?
- ❖ மனிதன் மேலுக்குப் பார்த்துத்தான் பழக்கப்பட்டவன். தன்னிலும் உயர்ந்தவரிடமிருந்து ஏதும் பெற்றுக்கொள்ளும் நோக்கமே மேலோங்கி நிற்கும். கீழ்நோக்கிப் பார்த்து, வறியவர்களையும் ஆதரவற்றவர்களையும் ஆதரிக்க மனிதன் இயற்கையாகவே விரும்புவதில்லை.

கவிதை

# மறத்தமிழர்

கவிஞர். பாடும்மீன். சு. சிறிகந்தராசா

அரங்கேற்ற அழைப்பு வந்தது.
ஆங்கிலத்திலும் தமிழிலும்
ஆழகான வண்ணத்தில்,
மினுமினுக்கும் தாளில்!

நமது சனம் நாடுவிட்டு நாடு வந்தாலும்
நமது மொழியை மறக்கவில்லை!
உடல் புல்லரித்தது.
ஒவ்வொரு மயிரும் நிலைகுத்தி நின்றது.
தமிழனா கொக்கா?

காதல் மனைவி காஞ்சிபுரம் பட்டுடுத்தாள்
பேதம் சொல்லாமல் என் பிள்ளை தாவணியில்
நானும் கரைவேட்டி சால்வையுடன்
ஆகா! என்னே அழகு காரேறி
நேரே றிங்வூட்டில் நின்றோம் யாம்!

குத்து விளக்கென்ன, கும்பமென்ன
சந்தனக் கிண்ணமென்ன
அத்தனையும் தமிழ் பண்பாட்டை
அழகாகக் காட்டினவே!
ஆகா இவர்கள் தமிழர்கள்!
அன்னிய மண்ணிலும் அன்னைத் தமிழுக்கு
அணிசெய்யும் மறத்தமிழர்கள்!
எண்ணியபோதே நெஞ்சு
ஒருகணம் நிமிர்ந்தது

அரங்கேற்றம் தொடங்கிற்று.
ஐயர் வந்தார்!
பையப் பையவே பூசைகளை
பக்குவமாய்ச் செய்தார்.
வந்திருந்த எல்லோரும் எழுந்து நிற்க
மந்திரம் சொன்னார் ஐயர் வடமொழியில்!
சுக்கிராம் பிரதணம்.. விக்ஷ்னும் சசீபர்ணம்..
ஐயர் தமிழர்தான்,
ஆண்டவனுக்கு விளங்காது!
தமிழில் சொல்வதற்குத் தர்ப்பை வழிவிடாது
மெய்யாவே வடமொழி அவருக்கும் தெரியாது
விளங்காது கும்பிட்டோம் நாமேதும் பறையாது
பாடியவர் தமிழர் பாட்டுக்களும் தமிழ்தான்
ஆடிய பிள்ளை அசல் தமிழிச்சி
அவள் பெற்றோரும் பச்சைத் தமிழர்
பயிற்றுவித்த ஆசிரியையின்
பரம்பரையே தமிழ்தான்
பக்கத்தில் இசைகொடுத்த எல்லா
விற்பன்னரும் தமிழர்.

ஆயிரம்பேர் பார்வையாளர்கள் அமர்ந்திருந்தார்
அனைவரும் தமிழர்கள்,
ஆங்கிலத்தில் தூசு துப்பரவாய்
பேசத்தெரியாதோர்
அவர்களிலே அறுபது விழுக்காடு
ஆடியவர், பாடியவர், அரங்கிலே கூடியவர்
ஆழகாய் உடுத்தி வந்த அறிவிப்பாளர்
அத்தனையும் தமிழர்!
ஆனால் அறிவிப்புமட்டும் ஆங்கிலத்தில்!

தமிழர் பெயரையெல்லாம்
தாறுமாறாய்க் கடித்து
தடக்கி முடக்கி தாள இராக
வகைசொன்னாலும்
ஆங்கில உச்சரிப்பு அழகிலே
சொக்கி
அறவே விளங்காதோரும்
அடுத்தவரைப்பார்த்து
அடிக்கடி சிரித்தே ஆகாவென்று
கைதட்டுகிறார்.

அவ்வைக்குச் சுட்டபழம் அழகான
அபிநயத்தில்
ஆனால் விபரிப்போ ஆங்கிலத்தில்!


கண்ணன் தயிரைக் களவாடித்
தின்றதெல்லாம்
வண்ணத் தமிழில் வடித்தெடுத்த பாடலுக்கு
மின்னும் அரங்கில் மிகவடிவாய்
அபிநயித்தால்
என்ன இழவுக்கு இங்கிலீசு வியாக்கியானம்?

வாழ்க தமிழ்!
எவரும் தமிழனை அடிமையென்று
சொல்லவில்லை!
எவருக்கும் அடிமையாகாமல் தமிழனால்
இருக்க முடியவில்லை!



# கிரிக்கெற்

**கிருஷ்ணமூர்த்தி**



உண்மையைச் சொன்னால்கிரிக்கெற்றைப் பற்றி எனக்கு ஒரு மண்ணாங்கட்டியும் தெியாது. அதுக்குப் பல காரணங்கள் உண்டு. சின்னவயதிலை சாறம்கட்டிக் கொண்டு ஊரிலை விளையாடுற ரவுண்டேசு என்ற விளையாட்டை வெள்ளைக் காற்சட்டையும் வெள்ளை மேல்சட்டையும் போட்டுக்கொண்டு விளையாடினால் அதுக்குப் பெயர்தான் கிரிக்கெற் என்று நினைச்சேன். நகரங்களில் உள்ள பெரிய பள்ளிக் கூடங்களில்தான் அந்த விளையாட்டு விளையாடலாம் என்ற கருத்தும் எனக்கு இருந்தது. பிறகு சிவப்புக் கட்சிகாரர்களுக்குப் பின்னாலை நின்று கொண்டு கொடி பிடிச்ச காலத்திலை, அவர்கள் சிந்திய சித்தாந்தத்தில் ஒன்று கிரிக்கெற் என்றால் பதின்மூன்று முட்டாள்கள் விளையாட ஆயிரம் முட்டாள் பார்க்கும் விளையாட்டு. எனவே ஆயிரத்தில் நானும் ஒரு முட்டாள் ஆக இருக்க விரும்பவில்லை.

தடை தாண்டி ஓட்டப்போட்டி எங்களுக்கு பழக்கமான விளையாட்டு எனவே பல தடைதாண்டி ஓடி அவுஸ்திரேலியா வந்து சேர்ந்தேன்..

சரி, நேராக விசயத்துக்கு வாறன். நான் பிறந்தது ஸ்ரீலங்காவில் ஆனால் என்னை இந்தியன் என்றுதான் அழைப்பார்கள். கன போராட்டத்திற்குப் பிறகு ஸ்ரீலங்கா சிட்டிசன் கிடைத்தது பின்னர் அவுத்திரேலியா வந்தேன். இங்கு நான் வந்த நேரம் அவுஸ்திரேலியன் கவுன்மெண்டு கூப்பிட்டுக் கூப்பிட்டு இந்நாட்டுக் குடியுரிமை கொடுத்தார்கள். கஷ்டப்பட்டு வாங்கிய ஸ்ரீலங்கன் சிட்டிசன் காற்றில் பறந்தது. இப்ப நான் அவுஸ்திரேலியன்.. ஆனால் வெள்ளைகள் எல்லாம் என்னை ஸ்ரீலங்கன் எண்டுதான் சொல்வார்கள். அதுவும் ஸ்ரீலங்கா கிரிக்கெற் ரீம் இங்கே விளையாட வந்தால் போதும் என்னுடன் வேலை செய்யும் வெள்ளைகள் என்னுடன் கிரிக்கற்றை பற்றியே கதைப்பார்கள் ஏதோ நான் கிரிக்கெற் மட்டையுடனும் பந்துடனும் பிறந்தது போல அவர்களது நினைப்பு. திரும்பவும் சொல்லுறன் அப்ப எனக்கு கிரிக்கெற்றைப் பற்றி ஒரு இழவும் தெரியாது. ஆனால் தெரிந்த மாதிரி கொஞ்ச நாளாக சமாளித்து சமாளித்துக் கொண்டு வந்தேன். ஆனால், இது கன நாளைக்கு தாக்குப்பிடிக்காது எனத் தெரிந்து களத்தில் இறங்கினேன் கிரிக்கெற் படிப்பதற்கு.

முதல் பாடம் கிரிக்கெற் விளையாடுபவர்களது பெயர்களை படித்தேன். அரவிந்த டீ சில்வா, அர்சுணா ரணதுங்கா, முத்தையா முரளிதரன். மற்ற அணி, மாக் ரெயிலர், மைக்கல் பவன், சேன் வான், றிக்கிப் பொண்டிங். இந்திய அணி டென்டுல்கார், அனில் கும்ளே முதல்பாடம் பெரிய கடினமில்லை. பாஸ்தான்.

அடுத்த பாடம்தான் கொஞ்சம் வில்லங்கமாய் போய்விட்டது. கிரிக்கெற் சொறகள், எல்பிடவுள்யூ, வயிற்போல், விக்கெற் என்பன. இந்தக் கேள்விக்கான பதிலைத் தேடி ரீவியிலை கிரிக்கெற் விளையாட்டை பார்க்கத் தொடங்கினேன். பார்க்கப் பார்க்க

புரிந்த மாதிரியும் இருந்தது, புரியாத மாதிரியும் இருந்தது. விக்கெற் என்பது மூன்று கம்புகள் இஞ்சாலையும் குத்தியிருக்கும் அங்காலையும் குத்தியிருக்கும், ஆனால் மட்டையைப் பிடிச்சிருப்பவர் பந்தை அடிச்சு அதை எதிர்தரப்பு காச் பிடித்தால், விக்கெற் ஒன்று போட்டுது என்று சொல்கிறார்கள். அப்படியென்டால் அந்த மூன்று குச்சிகளும் விக்கெற்றா அல்லது மட்டைபிடிச்சு பந்தை அடிப்பவர் விக்கெற்றா? கேள்விக்கான பதிலைத்தேடி அலைந்தேன். இப்படிக் கஷ்டப்பட்டு கொஞ்சம் கொஞ்சமாக கிரிக்கெற்றைப்பற்றி அறிந்து கொண்டேன்.

அடுத்த பிரச்சனைதான் பெரிய பிரச்சனையாகப் போய்விட்டது. இலங்கைத் தமிழர் பிரச்சனை தீர்த்தாலும் தீர்க்கலாம் இதை தீர்க்க முடியாது போல் இருந்தது. நான் எந்த அணிக்குச் சப்போட் பண்ணுவது என்பது புதுச்சிக்கலாக வந்து சேர்ந்தது. இலங்கையில் இருந்த போது வடக்கு கிழக்கு தமிழர் சொன்னார்கள், நீ இந்தியன் என்று சிங்களவர் சொன்னார்கள், நீயும் இந்தியன் வடக்கு கிழக்கு தமிழரும் இந்தியன் என்று. இதாலைதான் முன்பு ஒரு காலத்திலை கிரிக்கெற் என்றால் கொழும்பிலை தமிழர் இந்தியா அணிக்கும் முஸ்லிம்கள் பாகிஸ்த்தான் அணிக்கும் சிங்களவர் இலங்கை அணிக்கும் சப்போட்பண்ணிச்சினம். பிறகு தமிழர்களுக்கு இந்தியாவுடன் ஏற்பட்ட உரசலாலை இந்தியாவுக்கு சப்போட் பண்ணுறதா இல்லையா என்று இருதலை கொள்ளியாய் தவிச்சினம். நான் முத்தலைக் கொள்ளியாகத் தவித்துக்கொண்டிருந்தேன். இலங்கையா? இந்தியாவா? அவுஸ்திரேலியாவா? புரியாது குழப்பத்திலிருந்தேன். இலங்கைக்கு சப்போட் பண்ண வெளிக்கிட்டால் எனது தமிழ் நண்பர்கள் சொல்லுவார்கள், துரோகி என்று இந்தியா பக்கம் போனால் வயிற்று வலியையும் வடக்கத்தையானையும் நம்பேலாது என்பினம். வெள்ளைக்காரர் நான். விரும்பினால் என்ன விரும்பாட்டி என்ன என்னை ஸ்ரீலங்கா அணியிடம் சேர்த்து விட்டுவிடுவினம்.

நான் எங்கடை பிரச்சனையைச் சொன்னால் வெள்ளைக்காரர்கள் சொல்வினம் அரசியலையும் விளையாட்டையும் கலக்காதீர்கள் என்று. அவர்களுக்கு எப்போதும் பேச்சுப் பொருளாக விளையாட்டு இருக்கும். கிரிக்கெற் சீசன் முடிந்தால், புட்போல் சீசன் வரும் அதுவும் முடிந்தால் ரெனிஸ் வரும். இடையிடையே ஒலிம்பிக், கொமன் வெல்த் கேம் என்று அவர்களுக்கு விளையாட்டுக்கா பஞ்சம். மறந்தும் அரசியல் பேச மாட்டார்கள்

எங்களது நாட்டில் விளையாட்டுக்குள்ளை அரசியலும் இருக்கும் அரசியலுக்குள்ளை விளையாட்டும் இருக்கும்.

ஆனால், என்னுடைய பிள்ளைகளுக்கு ஒரு குழப்பமும் கிடையாது. யார் விளையாடினாலும் அவுஸ்திரேலியாவிற்குத்தான் சப்போட் பண்ணுவார்கள். எங்களைப் போலை ஆட்கள் தான் இரண்டு, மூன்று தோணிகளிலை கால் வைத்துக் கொண்டு இருக்கிறம். இளைய தலைமுறைகள் நல்ல சிந்தனைகளுடன் இருக்குதுகள். ஆனால் பெரிசுகள் எப்படியோ நச்சு விதைகளை போட்டு அதுகளை நாசமாக்கப்பார்க்குதுகள்.

இப்படி கிரிக்கெற்றைப் பற்றி ஆர்வமாக அறிந்துகொள்ளும் போது எதிர்மறையான செய்திகளும் காதை வந்தடைந்தது. கிரிக்கெற் விசரிலை திரியேக்கை பந்தையக்காரட்டை காசு வாங்கிக் கொண்டு விளையாட முதலேயே வெற்றி தோல்வியை தீர்மானித்து விட்டு எங்களுக்கு விளையாட்டு விட்டுட்டாங்கள். பிறகு கபில் தேவ் ரீவியிலை வந்து ஆழுது புலம்பினார். நாங்ளும் பாவம் பெடிப்பயலுகள் சரியென்று விட்டுவிட்டோம். ஆனால் எல்லாம் தெரிஞ்சுகொண்டு காசுக்கு தனது சிறுநீரகம் ஒன்றை வித்துப் போட்டு உலகக்கோப்பையை பார் க்கப் போன ரசிகரை நினைச்சு அழுவதா பரிதாபப்படுவதா தெரியல்லை.

கவிதை

# வெறுங்கனவு

மானுடன்

இன்னும் பிறக்காத எந்தன் திருமகனே
உந்தன் வருகைக்காய் உவகையுடன் பார்த்திருப்பேன்
பிஞ்சு விரல்களால் நீநெஞ்சில் உதைக்கும் நாள்
என்று வரும் நான் எதிர்பார்த்து காத்திருப்பேன்

மீளாகொடுமிடியோ ஆறா பெருந்துயரோ
ஏதும் இல்லையடா நான் இத்தேசம் தேடிவர
கொஞ்சம் சுதந்திரமும் மிஞ்சும் வருவாயும்
வஞ்சமின்றி தந்த இந்த மண்கடக்க மனமில்லை

வந்த எனக்கே இது வாய்த்த நிலமாக
உன் சொந்த நிலமிது பிறத்தி நிலமாயிடுமோ
இருக்கு ஊரினிலே ஓரிரண்டு கோயில்கள்
உருத்து உனக்குத்தான் உபயங்கள் செய்வாயோ

புட்டும் பொரித்து வைத்த புளிக் குழம்பும்
உனக்கும் சரிவருமோ
பொரித்த கிழங்கும் பேர்கரும்தான்
நீ பிடிவாதம் பிடிப்பாயோ

பாரதப் பெருங்கதையும் நாரதர் கலகங்களும்
நானுரைக்க நீ கேட்கும் நாளொன்று சாத்தியமோ
போதும்இவை“போறிங்”புரியாதவெறுங்கதைகள்
புறந்தள்ளிபோயிருந்து புத்தகம்படிப்பாயோ

பள்ளிவிழா ஒன்றில் பாரதியின் பாட்டொன்றை
பாங்காய் நீ உரைக்க பார்த்திருக்க வாய்த்திடுமோ
ஏனோ எனக்கிவைகள் என்றொதுக்கி நீ எனக்கு
ஏதும் புரியாத மொழி கீதம் இசைப்பாயோ

கண்கள் பார்த்தாலே காதல் எனநம்பி
கவிதை பல எழுதி கை பிடித்த கூட்டமடா
கட்டி அணைத்த பின்னும் கட்டில் பகிர்ந்த பின்னும்
காதல் இது என்ற கட்டாயம் உனக்கில்லை

எப்போதும் சுற்றிவர முட் கம்பி எனக்குண்டு
கட்டுப்பாடு என்று கட்டுண்டு போனவன்நான்
“எங்கபோறது” என்றும் “எதுக்கு இருக்கிறது” என்றும்
எப்போதும் கேட்கும் சிப்பாய்கள் உனக்கில்லை

வேரை தொலைத்துவிட்ட விருட்சமடா உன் அப்பன்
வேர்கிடக்கும் மண்ணை நீ விரும்பிடுதல் வெறுங்கனவோ
போர் முடிந்து போயும் புழுதி அடங்கா மண்ணில்
நீர்வார்க்க என்னோடு நீயும் வருவாயோ


ஆங்கிலத்தில் நான் சொன்ன ஐந்தாறு வார்த்தைகள்தான்
என் தாய் முகத்தில் புன்னகையை தவறாமல் தந்ததுகாண்
நீ ஆங்கிலத்தின் நடுவினிலே ஆறேழு தமிழ் சொன்னால்
அதுபோதும் என்றிருப்பேன் வேறென்ன நான்கேட்க

என் கிணறு என் கனவு எது சரியோ எது பிழையோ
இது தான் நான்
எதுவோ நீ



# மாதா கோயில் மணியோசை





**மங்களன்**

**கை**த்தொலைபேசியின் அலாரம் வழக்கம்போல அதிகாலை நான்கு மணிக்கு அடிக்க அவன் எழும்பி நாட்காட்டியை பார்த்தான். அது ஒரு ஞாயிற்றுக்கிழமை என்று தெரிந்த போது திரும்பவும் தலையணையில் முகம் பதித்தான். ஆனாலும் நித்திரை வரமறுத்ததால் முகட்டை பார்த்துக் கொண்டு மூன்று தசாப்தம் பின்னோக்கிப் பயணிக்கத் தொடங்கினான்.

அவன் தனது ஐந்தாம் வகுப்பு புலமை பரிசில் பரீட்சைக்கு படித்தபோது அவனது கண்டிப்பான தந்தை ஐந்து மணிக்கு அடிக்கும் மாதா கோயில் மணிச்சத்தத்துடன் எழுப்பி விடுவார். பின்னர், பலவிதமான சத்தங்களுக்கு அவன் நித்திரை விட்டு எழும்பியிருந்தாலும், அவன் கல்விப் பொது தராதர சாதாரண மற்றும் உயர்தர பரீட்சைக்கு படித்தபோது தானாகவே ஐந்து மணிக்கு மாதா கோயில் மணிச்சத்தத்துடன் எழும்பிவிடுவான். தனது பதின்ம வயதுகளின் இறுதியில் மேற்படிப்புக்காக தனது சிறிய கிராமத்திலிருந்து தலைநகரம் வந்தபோது கடிகாரத்தின் அலாரம் அல்லது அவனது மாமா எழுப்பிவிடும்போது எழுந்து விடுவான்.

பல லட்சம்பேர் புலம்பெயர்ந்தபோது அவனும் அவர்களின் ஒருவராக புலம் பெயர்ந்தான். பல நண்பர்கள் பிரிந்தார்கள். புதிய நண்பர்கள் சேர்ந்தார்கள். புதிய நாடுகள் பார்த்தான். தனக்கு என்று ஒரு வாழ்க்கை, குடும்பம், பிள்ளைகள் என்று வந்தபோது சிறுவனாக இருந்தவன் மூன்று தசாப்தத்தில் மனிதனாக மாறிப்போனான்.

கைத்தொலைபேசியின் அலாரத்தில் கடந்த பத்து பதினைந்து வருடங்களாக நித்திரையால் எழும்பினாலும், தனது பள்ளிப்பருவத்தில் தன்னை விழித்தெழ வைத்த அந்த மாதா கோயில் மணியோசையின் கணீர் சத்தத்துக்கு எப்போது எழும்பப்போகிறேன் என்று ஏங்கி நினைத்தவனுக்கு பசியும் வர இன்று என்ன சீரியல் சாப்பிடலாம் என்று யோசித்துக்கொண்டு கட்டிலால் எழுந்தான். மனைவி பிள்ளைகள் எல்லோரும் ஓய்வேயில்லாமல் பம்பரம் போல சுழன்று திரியும்போது, அதுவும் ஞாயிற்றுக்கிழமையென்றால் வீட்டில் இருக்கவே நேரமில்லாமல் இருக்கும்போது, அவர்கள் விரும்பினாலும் அவனுக்கு பிடித்த சுவையான இடியப்பம், புட்டு, அப்பம் போன்ற சாப்பாட்டை செய்து அவனுடனிருந்து எல்லோரும் சாப்பிடமுடிகிறதா இந்த புலம்பெயர் தேசத்தில்,

புலம் பெயர்ந்த தனது விதியை நொந்து கொண்டு Just Right சீரியல் சாப்பிடத்தொடங்கினான்.

கவிதை

# என் நாடு எனக்கு இருந்தால்...

பச்சைத் தண்ணிக்கல்ல
பனங்கள்ளுக்குக் கூட
காசில்லை அங்கு!

கால் போத்தல் மண்ணெண்ணெய்
காணும் எனக்கு
அந்தக் கைவிளக்கோடு
என் காலம் காவியமாய் இருக்கும்

ஒழுக்குவிழும்
ஓலைக் குடிசை ஆனாலும்
உயிரைக் குடிக்கும்
வாடகையா கொடுத்தேன்
கிழக்கு வெளுக்கும் போது...
கூடல் பனையில்
விடிவெள்ளி தெறிக்கும் போது
ஆடல் மங்கை போல்
"அடுத்த நாள்"
என் மனதில் ஆனந்தமாய்
கூத்தாடும்.

கட்டணங்களைச் சுமந்து
ஒருபோதும் "காலை"
விடிந்ததில்லை அங்கு!

கணவன் மனைவி
ஆளையாள் பார்ப்பது
இங்கு ஆண்டுக்கு ஒருமுறைதான்
அன்று தான் ஆண்டவனும் பிறக்க
ஆயத்தமானான்
மாவிடிச்சு ஒழச்சாலும் மனுசனோட
மறுகரையில்
பூங்கொடிபோல் புன்னகைக்கும்
அந்த - பொல்லா
சிறுக்கி இன்னும் உசம்புலதான்

ஆள் மாறும் ஆசைக்கு
இங்கு அகதியென்று பெயர்
ஊர் மாறிப் போனதால்
உணர்வல்ல
உடல் கூட நிறம் மாறிக் கலக்கும்
பச்சோந்திகளுக்கென்ன பஞ்சம்! இங்கு
கிட்டான் கறை உழுது - மொட்டை
கருப்பன் நெல் வெச்சு- "சோ" என
கிட்டும் மாரியில் - கொழுந்தி....
ஒன்னோடு நாளைஞ்சி
ஒட்டும் ஒன் துணியுள்
ஒன்றாகிப் போகும் அந்த
குட்டிச் சுவர்க் குடிலும்- நீயும் கடவுள்
கொடுக்கா வரம் எனக்கு!

கணவனோ
மனைவியோ
காசிருந்தால் மனமிருக்கும்
கண்கெட்டுப் போனாலும்
உறவிருக்கும்

மோசம் போன
எம் வாழ்வு- இங்கு
முற்றிலும் அழிகையிலே
என் தேசமே!
உன்னை
எத் திக்கும் பார்க்கிறேன்

காசா யார் கேட்டா
ஆசயா பட்டு- என்ன
அள்ளி அணைக்கையில்
தூசியாகாதோ....உந்த
"காசினி' என் முன்னால்?

வேலை இல்லாமல் - இங்கு
ஒதுங்க வீடு - இல்லை
வீடு வந்து சேர்ந்தாலோ
ஆளில்லை!

தேடு சுகம் என்று
சொல்ல எதுவுமில்லை
இங்கு
தெரிந்த சொந்தம் என்று கொள்ள
யாருமில்லை

வேலைக் களப்புல - கண்ணே!
வேந்திளச்ச
"எ" ஒடம்பு - அந்த
ஓலக் குடிசக்குள்
"ஒன்றிரண்டு ஒத்தணத்தில்"
வீரம் படைக்காதோ?
உன் விழிப் பார்வைதான்
இனிக்காதோ?

சசிதரன் தனபாலசிங்கம்

# ஆடி..... நீ..... ஆடி வாராயோ.....

● அருண் விஜயராணி

ஆடி மாதம் என்றாலே நம் நினைவுக்கு வருவது ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை.. ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே. என்ற நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் இனியபாடலாகும்.

"ஒரு அடி தழும்பினால் ஏழு அடி தழும்பும் என்ற எண்ணத்துடன் வாழ்க்கையில் எவ்வித கஸ்ரங்களும் வரல் ஆகாது என ஆடிப்பிறப்பன்று ..(அனேகமாக ஆங்கில மாத எண்ணிக்கையில் ஜூலை 14,15,16, ஆம் திகதிகளில் ஆடி பிறப்பதுண்டு.)

அதிகாலை எழுந்து கூழ், கொழுக்கட்டை தயாரித்து இறைவனுக்குப் படைத்து தாமும் உண்பார்கள் தமிழர்.

திருமணமான தம் பெண்ணை ஆனிக் கடைசியில் கணவனிடம் இருந்து பிரித்து... தம் வீட்டில் கொண்டுவந்திருந்து வைத்திருப்பார்கள் நம் முன்னோர்கள். ஆடியில் பெண் கருத்தரித்திருந்தால் சித்திரைக் குழந்தை ...குடும்பத்துக்கு ஆகாது என்ற துர் நம்பிக்கை நம்மவர் மத்தியில் பரவிக் கிடந்தது. விஞ்ஞானயுகத்தில் ...இவைகள் மாற்றம் அடைந்து விட்டாலும் இன்னமும் இவ் வழக்கம் தமிழகத்து சில ஆசார வீடுகளில் நம்பிக்கையின் அடிப்படையில் நடந்து கொண்டுதான் இருக்கிறது.

ஆடிமாதத்தில் தம் கணவர் நலம் வேண்டிப் பெண்கள்..விரதம் இருந்து...தீபம் ஏற்றி ஆற்றில் தீபங்களை வேண்டுதல்களோடு மிதக்கவிடும் வழக்கம் இன்னமும் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது தமிழகத்தில்.

ஆடி மாதம் அதை நன்மையான சுபகாரியங்கள் நடைபெறுவதற்கு உதவாத மாதங்களில் ஒன்றாக நம்மவர்கள் தள்ளி வைத்துள்ளார்கள் இன்னமும்.

ஆனால் இந்த ஆடிமாதம் தான் ...நம்மிடையே வழக்கத்திலுள்ள பல சமய விழாக்களுக்கும் விரதங்களுக்கும் திறவுகோலாக உள்ளது என்றால் ...நம்மில் பலருக்கு ஆச்சரியமாக இருக்கலாம்.

ஆடியில் வரும் அத்தனை செவ்வாய்க் கிழமைகளுமே அம்மனுக்குரிய விசேஷ தினங்களாகக் கணித்து ...ஆடிச் செவ்வாய் என அம்மனுக்கு அபிசேகமும் ... அலங்காரங்களுமாகும்

அதனையொட்டிவரும் ஆவணிச் சதுர்த்தி பிள்ளையாருக்குரிய விசேட தினமாகக் கொண்டாடப்படுகிறது ......உலகெங்கும்.

இக் கணேச சதுர்த்தியில் ....மனிதனது அகங்காரம் தானாக அழிக்கப்படல் வேண்டும். ....குறைகள் களைந்து புனிதனாக மனிதன் மீள் உருப் பெற வேண்டும் என்ற தத்துவத்தைக் காட்டும் முகமாக கணேசப் பெருமானை வீதி வலமாக ஊர்வலம் வந்து ஆற்றில் கடலில் கரைக்கும் விழா பெருவிழா ஆகும். ஆவணி முடிந்து புரட்டாதி பிறந்துவிட்டாலே பின்னர் நவராத்திரி அம்பிகையை வீரத்தைத் தரும் துர்க்கையாக அஷ்டசெல்வங்களை அருளும் மகாலக்ஷ்மியாக...ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் அருளும் கலைவாணியாக ஒன்பது நாட்களும் வழிபட்டு கடைசி பத்தாவது நாள் ஆயுத பூசையாக விஜயதசமியுடன் முடிவடையும் நாளாகும். இவ் விஜயதசமியிலேயே வித்தியாரம்பம், புதிய வேலைகள், வியாபாரம் என்பன ஆரம்பிக்கும் விசேச நாளாக நம்மவர் போற்றுவர்.

பத்து நாட்கள் நவராத்திரி முடிவில் கணவர்க்காகப் பெண்கள் நோற்கும். கேதாரகௌரி விரதம் ஆரம்பித்துவிடும். இந்துக்கள் கொண்டாடும் தீபாவளி தினத்தன்று கோயிலுக்குச் சென்று அம்மனிடம் புதிய நூல் பெற்று தம் மாங்கல்யத்தில் முடிந்து கொள்வார்கள் சுமங்கலிப் பெண்கள்.

அத்துடன் முடிந்துவிட்டதா? ஐப்பசியில் தேவர்கள் துயர் தீர்த்த சூரசம்காரம்.ஆறு நாட்களும் கந்தனுக்காக கந்தசஷ்டி விரதத்தை கடுமையுடன் அனுட்டித்து .....குமரனின் திருக் கல்யாணத்துடன் களிப்புற்று ...நிறைவு பெறும் அடியார் கூட்டம்.

குமரனின் பெருமை முடிவுறும் பொழுது விநாயகரின் அருள்பாடும் "பிள்ளையார் கதை" தொடங்கி விடும். இருபத்தியொரு நாட்கள் பிள்ளையார் பெருங்கதை பாடிமுடிக்க, பிட்டுக்கு மண் சுமந்த சிவபெருமானின் புகழ்பாடும் திருவெம்பாவை அடுத்ததாக.....

இப்படியாக இந்துக்கள் வாழ்வில், நீக்கமற நிறைந்துள்ள பல சமய விழாக்களின் திறவு கோலாக விளங்கும் இவ் ஆடி மாதத்தை இனியும் நாம் தள்ளிடாமல் ..ஆடி நீ மகிழ்வுடன் ஆடி..... ஆடி ...... ஆடி .................... வாராயோ என அழைக்கலாமோ.

# ஆடிப்பிறப்பு



**ப. நித்தியா**

தமிழ் வருடத்தில்,ஆடி ஏழாவது மாதம், ஆடியின் முதல் நாள் "ஆடிப்பிறப்பு" எங்கள் தமிழருக்கு ஒரு முக்கிய நாள்.

இந்த நாளில் ஆடிக்கூழ் என்று ஒரு கூழ் செய்வார்கள். இந்த சுவையான கூழை அரிசி-மா, பயறு, தேங்காய்ச் சொட்டு,தேங்காய்ப் பால், மற்றும் பனங்கட்டி, சேர்த்துச் செய்வார்கள். ஆடிக்கூழுடன் கொழுக்கட்டை, வடை, பொங்கல், பணியாரம் போன்ற பலகாரங்களும் செய்து சாப்பிடுவார்கள்



இந்த ஆடிக்கூழைப் பற்றி தங்கத்தாத்தா என்று அழைக்கப்படும் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் அவர்கள் ஒரு அழகான பாட்டுப் பாடியிருக்கிறார்.

*ஆடிப்பிறப்புக்கு- நாளை விடுதலை,*
*ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே.*

*கூழிப் பனங்கட்டிக் கூழும் குடிக்க*
*கொழுக்கட்டைத் தின்னலாம் தோழர்களே!*

பத்தி எழுத்து

கோகிலா மகேந்திரன்

# நண்பரைப் பெறுதல்

“புதல்வரைப்பெறுதல்” என்றுவள்ளுவன் ஒரு அதிகாரம் செய்தான்.

“நண்பரைப் பெறுதல்” பற்றி அவன் சொல்லவில்லை. நட்புப் பற்றிச் சொன்னான். நல்ல நண்பன் எப்படி இருப்பான் என்று கூறினான்.

“உடுக்கை இழந்தவன் கைபோலே ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு” என்றான்.

உடை உடலை விட்டு நழுவும் போது எப்படிக் கையானது சொல்லாமல் கொள்ளாமல் அத் துன்பத்தில் உதவப் போகுமோ அதே போல் இருப்பான் நல்ல நண்பன் என்றார்.

இன்பத்தில் பங்கு கொள்ள யாராலும் முடியும். ஈ, எறும்பாலும் முடியும். துன்பத்தில் பங்கு கொள்வாரைத் தேடு. நட்பானாலும், காதலானாலும், உறவானாலும் அப்படியே தேடு என்பார் டாக்டர் மு.வ

மக்கள் கூட்டத்தின் பெரும் பகுதியினர் கடலின் ஆரவாரம் போல மேலே வந்து காட்சி தருவார்கள். புலம் பெயர் தமிழ் மக்களில் பலர் இன்று அப்படித்தான் காட்சி தருகிறார்கள். ஆயினும் உலகின் எந்தப் பகுதியிலும் சில சான்றோர்கள் கடலின் அடியில் காணப்படும் முத்துச் சிப்பிகள் போல மிக அமைதியாக வாழுவார்கள். இவர்களைத் தேடிப் பிடிக்க வேண்டும். இவர்களின் நட்பைப் பெற வேண்டும். இவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகத்தான் இருக்கும். அந்த ஒரு சிலருக்குள்ளேயே வாழ்ந்து மறைந்து போவது தான் நிறைவு.

இத்தகைய நல்ல நண்பரைப் பெறுவது எப்படி? நண்பனை எதிரியாக்குவதும், எதிரியை நண்பனாக்குவதும் பேச்சு என்று ”டால்ஸ்டாய்” கூறுவார். நல்ல முறையில் பேசத் தெரிந்திருப்பது முக்கியம் தான். அதைவிட நல்ல நண்பர்களைப் பெறுவதற்கென்று சில வழிமுறைகள் இருக்கத்தான் செய்கின்றன.

இந்த நல்ல மனிதர்களிடத்தில் உண்மையான மனதுடன் அக்கறை காட்டுதல் அவற்றில் ஒன்று. அந்த அக்கறையும் கரிசனையும் போலியானதாக இருக்கக் கூடாது. மனப்பூர்வமானதாய் இருக்க வேண்டும். வழியில் சந்திக்கும் போது “எப்படி இருக்கிறீர்கள்?” என்று கேட்பதைக் கூட ஒரு மரபுக்காக...... வெறும் வாய்ச் சொல்லாகவும் கேட்கலாம். உள்ளார்ந்த மனவிருப்புடனும் கேட்கலாம்.

ஒரு மனிதனுக்குத் தெரிந்த சொற்களில் மிக உவப்பானதாய் இருப்பது அவனது பெயர்தான். நிச்சயமாய் ஒரு மனிதன் தன் வாழ்விலே தான் கற்றுக் கொண்ட எந்தச் சொல்லையும் மறந்து விடலாம். ஆனால் தன் பெயரை ஒருபோதும் மறப்பதில்லை. அதன் அர்த்தம்... அவனுக்கு மிகப் பிடித்தமான, அர்த்தம் நிறைந்த சொல் அது என்பதுதான். விசித்திரமான விஞ்ஞானிகளில் ஒருவன் தமது புலன் முழுவதையும் ஆராய்ச்சியில் செலுத்திவிட்டு, தன்னுடைய பெயர் என்ன?” என்று பக்கத்தில் நிற்பவரைக் கேட்பது எப்போதாவது ஒருமுறை நிகழ்வது. சாதாரணமாய் யாரும் தமது பெயரை மறந்து போக முடியாது. ஆகவே ஒருவரோடு பழகும் போது முடிந்தவரை அவரது சொந்தப் பெயரை அடிக்கடி கூப்பிடுவது நல்லது. பட்டப்

பெயர் வைத்து அழைப்பதை முழுமையாக நிறுத்திவிட வேண்டும்.

எப்போதுமே அதிகம் பேசுபவராக இல்லாமல் அதிகம் கேட்பவராக இருப்பது நல்ல நண்பர்களைப் பெற உதவும். நண்பர்களைப் பேசுமாறு தூண்டி அவர்கள் பேசும்போது அனுதாபத்துடனும் அக்கறையுடனும் கேட்டு அவர்களின் இன்ப துன்பங்களில் முழுமனதோடு பங்கு பற்றுவது சிறந்தது.

“கற்றிலனாயினும் கேட்க” என்பான் வள்ளுவன்.

நண்பர்களின் பிரச்சனைகளை மட்டுமல்ல.. அறிவுசார் விடயங்களையும் ஒருவன் நிறையவே கேட்கவேண்டும்.

நண்பர்களோடு கதைக்கும் போது அவர்களுக்கு விருப்பமான விடயங்கள் பற்றி கதைக்கவேண்டும். பரிசு கொடுக்கும்போது அவர்களுக்கு விருப்பமான பொருட்களைக் கொடுக்க வேண்டும்.

எப்போதுமே குறிப்பிட்ட நண்பர்கள் தாம் முக்கியமானவர்கள் என்று கருதும் படி நடந்துகொள்ள வேண்டும். அதையும் மனப்பூர்வமாய்ச் செய்ய வேண்டும்.

நண்பர்களுக்கும் எமக்கும் இடையில் ஒரு விவாதம்ஏற்படஇடம்வந்தால்.......முடிந்தவரை அதைத் தவிர்த்து விடுவதே நல்லது. விவாதம் ஒன்று நடைபெற்று அதில் நாங்கள் வெற்றி பெற்றாலும் சரி தோல்வி அடைந்தாலும் சரி எங்களுக்கிடையில் உள்ள இறுக்கமான நட்புப் பாதிக்கப் படத்தான் செய்யும்.

“நீ செய்தது பிழை” என்ற வார்த்தையை ஒருபோதும் நண்பர்களின் முகத்துக்கு முன்னால் வீச வேண்டாம். அது எந்த மனிதனையும் புண்படுத்தத்தான் செய்யும். அதனால் நட்பில் ஒரு விரிசல் ஏற்படத்தான் செய்யும்.

ஆனால் நாங்கள் பிழை செய்து விட்டால் உடனே தயக்கமின்றி அதை ஏற்றுக் கொண்டு விடுவோம். மறுபடி அத்தகைய பிழை நேராமல் விழிப்பாய் இருப்போம். மன்னிப்புக் கேட்கலாம். ஓரிரு முறை அடிக்கடி மன்னிப்புக் கேட்பதும் உகந்ததல்ல.

“அடிக்கடி மன்னிப்புக் கேட்பவர் அடுத்த தவறுசெய்ய ஆயத்தமாகிறார்” என்று சொல்லுகிறார்கள்.

நண்பர்களைப் பெற்றுக்கொள்ளத் தேவையான இன்னொரு முக்கிய பண்பு, பிரச்சனைகளை மற்றவர்களின் கோணத்தில் இருந்து பார்த்தல்.

எங்களுடைய கோணத்தில் இருந்தே எல்லா விடயங்களையும் பார்ப்பது மிக இலகுவானது ஆனால்........ ஒவ்வொரு விடயத்திற்கும் பலகோணங்கள் இருக்கும். சினிமாப் படம் பிடிப்பவன் எப்படி மிக நுணுக்கமான கோணங்களில் இருந்தெல்லாம் ஒரு விடயத்தைப் பார்க்கிறாரோ, அப்படி மற்றவர்களின் நிலைகளில் இருந்தும் பிரச்சனைகளைப் பார்ப்பவர் எப்போதும் நல்ல நண்பர்களைப் பெற்றுக் கொள்வார்.

எந்த ஒரு விடயத்தையும் நண்பர்களோடு கதைக்க ஆரம்பிக்கும் போது.....நட்பு ரீதியாக ஆரம்பிக்க வேண்டும். ”எனக்கு எல்லாம் தெரியும் ”அல்லது ”நான் சொல்வதே முடிவாயிருக்க வேண்டும்” என்ற தோரணையில் ஆரம்பிக்கும் உரையாடல் ஒருபோதும் வெற்றி பெறுவதில்லை. கலந்துரையாடலை ஆரம்பிக்கும் போதே, மற்றவர் ”ஆம்,,ஆம்..’ என்று சொல்லக் கூடியதாய் விடயத்தை நகர்த்திச் செல்லவேண்டும்.

வெட்கப்படுபவர்கள் ஒரு காரியத்தையும் சாதிப்பதில்லை. நீங்களாக வெளியே சென்று மனிதர்களைச் சந்தியுங்கள். அவர்களுடன் பேசுங்கள். அப்போதுதான் அரிய நண்பர்களைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். சமூக நிகழ்வுகளில் அடிக்கடி பங்கேற்கவேண்டும். மனிதர்கள்தான் ஒருவருக்கு அடிப்படையில் மகிழ்ச்சியைக் கொண்டுவருபவர்கள் என்ற நம்பிக்கை இருக்க வேண்டும்.

நண்பர்களைக் காணும்போது சிரிப்பது நட்பின் முதலாவது விதி எனக் கொள்ளலாம். அவர்களைக் காண்பதே உங்களுக்கு மகிழ்ச்சியைத்தருகின்றது என்ற செய்தியை

உடல் மொழிமூலம் தெரிவிப்பது மிக வினைத்திறனுள்ள முறையாகும். எளிமையான கவர்ச்சியான வழி இந்தப் புன்னகை.

தேவை ஏற்படும்போது உதவுவது நட்பைப் பலப்படுத்தும் வழி. நண்பருக்கு எது தேவை என்பதைத் தெளிவாகக் கேட்டு அறிந்து அதைச் செய்ய வேண்டும். நாமாகச் செய்யும் உதவி சிலவேளை உபத்திரவமாகவும் போய் விடலாம். ஆகவே கேட்டுத் தெரிந்து உதவுவோம். நண்பர்கள் கேட்கும் போது பயனுள்ள தகவல்களைச் சொல்லக் கூடியவராய் இருப்பதும் சிறப்புத்தான். வேறு எங்கேயும் பெற முடியாத தகவல்களை உங்களிடம் பெறலாம் எனும்போது நீங்கள் விரும்பப்படுவீர்கள்.

நட்பு ஒரு நெருக்கீட்டைத் தரக்கூடாது. ஆகவே எதையும் செய்யும்படி நண்பரை வற்புறுத்தக் கூடாது. அவராக விரும்பிச் செய்வதை ஏற்றுக் கொள்ளலாம்.

நண்பர் சொல்லும் இரகசியங்களை இரகசியமாகப் பேணத் தெரிய வேண்டும். இவரிடம் சொன்னால், அது மூன்றாவது நபருக்குத் தெரிய வராது என்கிறபோது எங்களிடம் விடயங்களைப் பகிர்ந்து கொள்ள யாரும் விரும்புவார்கள். அந்த நம்பிக்கை நட்புப் பலம் பெற உதவும்.

பல நண்பர்களைப் பெறுவோம். அதன் மூலம் நமது வாழ்வில் மகிழ்ச்சியை இரட்டிப்பாக்குவோம்

## இனிய மொழிகளில் இருபது இதோ

1. ஆரோக்கியம், இளமை இரண்டையும் இழந்தபின்னர்தான் மதிக்கிறோம்.
2. எதுவுமே தெரியாதவனுக்கு எந்த சந்தேகமும் இல்லை.
3. நாலு ஆண்கள் கூடினால் ஒற்றுமை. நாலு பெண்கள் கூடினால் வேற்றுமை
4. இறக்கும் போது அழக் கூடியவர்களை வாழும்போதே தேடிக்கொள்.
5. கிணறு வெட்டுபவன் ஒருவன் அதில் நீர் பருகுவோர் பலர்.
6. கடன் வாங்கி ஏழையானால் பரவாயில்லை. கடன் கொடுத்து ஏழையாகாதே.
7. பணம் எப்போதும் உறவாக இராது. உறவுதான் பணமாக நிற்கும்.
8. மூடிய கைகளுடன் மனிதன் பிறக்கிறான். திறந்த கைகளுடன் விட்டுப்போகிறான்.
9. இனிமையாய் இருந்தால் உன்னை விழுங்கிவிடுவார்கள். கசப்பாயிரு, துப்பிவிடுவார்கள்.
10. திருமணம் தும்மல் போன்றது, எப்போது வருமென கூறமுடியாது.
11. அழுகிற ஆணையும் சிரிக்கிற பெண்ணையும் நம்பாதே.
12. பெண்ணின் கோணல் பொன்னிலே நிமிரும்.
13. பெண்ணில்லாத வீடு வாளி இல்லாத கிணறு போன்றது.
14. நூலறிவு குளம் போன்றது. மெய்யறிவு ஊற்றைப் போன்றது.
15. பொய் சொல்லி வாழ்ந்தாருமில்லை. உண்மை சொல்லி கெட்டாரும் இல்லை.
16. ஆறினை நூறாக்குபவள் தாய், நூறினை ஆறாக்குபவள் தாரம்.
17. அழகிய பெண்ணும் கிழிந்த ஆடையும் எந்த ஆணி(யி)லும் மாட்டிக் கொள்ளும்
18. செய்யத் தெரிந்தவன் சாதிக்கிறான், செய்யத் தெரியாதவன் போதிக்கிறான்.
19. பணம் இருந்தால் உன்னை உனக்குத் தெரியாது, இல்லையென்றால் உன்னை யாருக்கும் தெரியாது.
20. பணம் என்பது என்ன தெரியுமா? கொஞ்சம் கடன் வாங்கிப்பார், அப்போது புரியும்.

கவிதை

# அம்மா

அரசு

நிலவா அது நிலவில்லை
நீ சோறூட்டும்போது
வானில் வலம் வருமே
அது மட்டுமே நிலவு!

தமிழின் முதலெழுத்து “அ”
அது உன்னிலிருந்தே
உலகம் தொடக்கம் என்ற
உன்னதத் தத்துவத்தின் முதல்!

வயிற்றில் பூட்டி உயிரையூட்டி
வயிற்றில் ஊட்டி - வந்த பின்பும்
வயிற்றுக்கிட்டது உணவுமட்டுமா
மனிதனாய் வாழென்ற உணர்வையும்தானே!

மண்ணில் உனை விடச் சிறந்த
மக்கள் தொடர்பாளர் உண்டோ
உலகத்தை முறையாய் அறிமுகப்படுத்தினாய்
எனதப்பாயாரென்பது முதற்கொண்டு!

பள்ளிப் பாடமும் நடத்திய வாத்தியாரும்
பிடித்தது மில்லை என் நினை
விலுமில்லை
நீயெடுத்த பாடமும்
பற்றும்தானே
இன்றும் வாழவைக்கும்
பாடமாய்ப்படிந்தது!

எல்லா உயிர்களும்
கொடுப்பதில்லை
கொடுத்தாலும் அது
எடுப்பதற்கே
நீ கொடுப்பதை மட்டும்தானே
அரும்பெரும் குணமாய்க் கொண்டவள்!

ஆண்டவனுக்கும் மேலானவள் நீ
ஆக்கல் காத்தல் அழித்தல் மூன்றில்
அழித்தலெனும் சொல்மட்டும் உன்
அகராதியில் கிடையாதே!

ஏழு பிறப்பு எனக்கெதற்கு
இப்பிறப்பொன்றேபோதும்
உன்னிடம் மகனாய்ப் பிறந்ததில்
பெற்றேனே நானென்றும்
எழாயிரம் பிறப்பின் புண்ணியம்!



கவிதை

கரிகால்வளன்







# கவிதை சொல்லும் படங்கள்

அம்மா என்றால் அன்பு என்று அமுதத் தமிழ் பேசும்
அம்மா பொழியும் அன்பிற்கவளின்  அன்பே ஈடாகும்
பொன்னால் பொருளால் புகழால் அடையும் இன்பம் எல்லாமும்
அன்னை அன்பின் முன்னாலே கால் தூசிக்கீடாகும்

கன்றுக்காக பாலைச் சுரக்கும் பசுவின் தாயுள்ளம்
சின்னக் கவியின் தலையை வருடும் அன்னைக் கவியுள்ளம்
போர்வையின்றி சாலையோரம் கண்கள் அயர்ந்தாலும்
பார்வையாலே மகவைக் காக்கும் பாசத் தாயுள்ளம்

தன்னுயிர் மேலாய்  மன்னுயிர் காக்கும் மாசறு திருவுள்ளம்
தன்னலம் மறந்து மெழுகாய் உருகும் தியாகப் பெருவெள்ளம்
இன்பம் ஈந்து துன்பம் ஏற்கும் இனிய தாயுள்ளம்
இம்மாநிலத்தின் உயிர்களனைத்தும் தவமாய் பெற்ற வரம்

***கவி*** *- குரங்கு;* ***மன்னுயிர்*** *- உலகில் வாழும் உயிர்கள்*

படங்கள் : **மதி,**
கவிதை : **உசாநந்தினி**

பரா மகன்

# இடப்பெயர்வு

காலை வேலைக்கு போகும்பொழுது சரியான குளிராக இருந்தது, இப்ப வேலை முடிஞ்சு வரும்போது வெக்கையாக இருக்கிறது. என்னடா இந்த மெல்பேர்ண் வெதர்(weather) எண்டு கோட்டை(coat) கழட்டிக் கொண்டு வீட்டுக்கு உள்ளே வந்தால் “அப்பா இடப் பெயர்வு என்றால் என்ன ? என்ற ஒரு கேள்விக் கணையுடன் குழப்பினான் அவுஸ்திரேலியாவில் பிறந்த எனது மகன். வினா வியப்பாக இருந்தது என்ன தம்பி ஏன் கேட்கிறாய் என்றேன்.

இடப்பெயர்வு என்ற ஒரு சொல் தமிழ் கட்டுரை ஒன்றில் இருந்தது. அது என்னென்று விளங்கவில்லை அதுதான் கேட்டேன். கூகிள் டிறான்சிலேடறிலும் (Google Translator) போட்டுப் பார்த்தேன் displacement என்று வருகுது – வடிவாக விளங்கேல்லை, உங்களுக்கு தெரியுமா அப்பா ? என்றான்.


நினைவுகள் எங்கோ சென்றன - குவான்டஸ்(Qantas)லயன் எயார் (Lion Air) விமானப் பயணங்கள் இன்றியே நான் யாழ்ப்பாணத்தில் நிற்கிறேன். நாள் நன்றாக நினைவிருக்கிறது 30 ஐப்பசி 1995 காலைப் பொழுது.

அடுத்த வருசம் க.பொ.த உயர்தரம் எடுத்து எப்பிடியாவது கம்பஸ் (Campus) போய் எஞ்சினியராக வேண்டும் என்ற நினைப்பில் படித்துகொண்டு இருக்கிறேன். உம்மட அக்கா 4A எடுத்தவாதானே பிறகென்ன நீரும் சிம்பிளா எடுக்கலாம் என்று வெறுப்பேற்றுபவர்கள் வேறு.... படிச்சு பத்துவருச பாஸ் பேப்பர் செய்து எக்சாம் எடுத்தால் தான், அதில் உள்ள கஸ்டம் தெரியும்.

செய்து கொண்டிருந்த கணக்கிற்கு சரியா விடை வரவில்லை – அம்மாவிடம் ஒரு தேனீர் கேட்டு விட்டு படலையை பார்த்தால் காலை வேலைக்குப் போன அப்பா அவசரமாக வீட்டை வந்துகொண்டு இருக்கிறார். “அவங்கள் யாழ்ப்பாணத்தை பிடிக்கப் போறாங்களாம் சனம் எல்லாம் வெளிக்கிடுகிதுகள் கெதியா வெளிக்கிடுங்கோ” என்று அப்பா பதட்டத்தோடு சொல்கிறார்.

கனவுகள் கலைகின்றன – உயிருக்கு முன்னால் எஞ்சினியர் கனவு எம்மாத்திரம்! உயிரை காக்க கையில் எடுக்கக் கூடிய உடமைகளுடன் நகர தயாராகிறோம்.






சைக்கிளில் ஓட்டிப் போகலாம் என்ற நம்பிக்கையில் ஒரு சைக்கிளில் நான் வெக்ரர் மகாதேவா சோதிலிங்கம் ஆசிரியர்களின் நோட்ஸ் பாஸ் பேப்பர் மற்றும் உடுப்புகளுடன் ரெடி. முக்கிய ஆவணங்கள் நகைகள் மற்றும் உணவு சமையல் பாத்திரங்களுடன் அப்பாவின் சைக்கிள் ரெடி.

அது ஒரு நீண்ட பயணமாக இருக்கும் என்று வெளிக்கிடும் பொழுது தெரியவில்லை. மத்தியானம் பன்னிரெண்டு மணிக்கு சைக்கிளில் ஓடிப் போகலாம் என்று வெளிக்கிட்ட நாங்கள் சனநெரிசலில் நடக்கத் தான் முடிந்தது.

சனவெள்ளம் ஊர்ந்துகொண்டிருந்தது ...கைக் குழந்தைகள் கர்ப்பிணிகள் முதியோர்கள் நோயாளிகள் என ஊரை விட்டு ஓடும் அந்த அவலம் நடந்துகொண்டிருந்தது ...இரவு எட்டு மணியாகிவிட்டது இன்னும் செம்மணியை தாண்டி நாம் போகவில்லை ...பாலுக்கு அழும் குழந்தைகளும் நடக்க முடியாமல் முனகும் முதியோர்களாலும் வீதி நிறைந்திருந்தது ...

கால்கள் தளர்கின்றன அம்மா தந்த மலிபன் பிஸ்கற்றை சாப்பிடுகிறேன். மழை சாடையாக தூறுகிறது மழை நீரில் நாவை ஈரப்படுத்திகொள்கிறேன். இடப் பெயர்வு தொடர்கிறது...

மறு நாள் காலை எட்டு மணிக்கு தான் மட்டுவிலை சென்று அடைய முடிகிறது. முதல் நாள் காலை அம்மாவிடம் கேட்ட தேநீரை அப்போது குடிக்கும் போதுதான் உடலில் மீண்டும் உயிர் வருகிறது.

இது பத்துக்கும் மேற்பட்ட எனது இடப்பெயர்வுகளில் ஒரு சிறு சம்பவம் ! இடப்பெயர்வை எப்படி நான் எனது மகனுக்கு விளங்கப் படுத்துவது ?

வரலாறுகள் வெற்றி பெற்றவர்களால் தான் எழுதப்படுவதாக அண்மையில் எங்கோபடித்தது நினைவுக்கு வந்தது.... கூகிள் டிரான்சிலேடர் இக்கு ஒரு தமிழ் வார்த்தையின் பின்னால் உள்ளவலிகளையும் உணர்வுகளையும் எப்படி வர்ணிக்க முடியும் ?

ஹலோ(Hello) அப்பா என்ன யோசனை - உங்களுக்கு தெரியாதா ? என்ற எனது மகனின் வினாவுடன் நான் மீண்டும் அவுஸ்திரேலியாவில் நிற்கிறேன்.

வரலாறுகள் மாற்றி எழுதப்படலாம் ஆனால் உண்மைகள் உறங்காது என்பதால், மிகப் பொறுமையாக எனது மகனுக்கு விளங்கப்படுத்துகிறேன் - இடப்பெயர்வு என்றால் என்னவென்று .........

**(யாவும் கற்பனை அல்ல)**

# இரவின் மடியில்

வெண்ணிலவு வானத்தில்
பாலொளியைத் தூவும்
வெண்மணலில் என் பிள்ளை
"அ" எழுதிப் பழகும்

கண்ணயர்ந்து போகையிலும்
காற்று வந்து களையும்
கவி எழுதிப் பாடச் சொல்லி
தமிழ் உருகி வழியும்

மடி தூங்கும் என் பிள்ளை
கதை கேட்டு அழு(கு)ம்
மண்ணாண்ட தமிழ் மன்னர்
கதை சொல்லத் தூங்கும்

பாட்டி வடை சுட்ட கதை
சொல்ல மனம் இல்லை
பறவைகளும் மிருகங்களும்
ஏய்த்து வாழ்வதில்லை

தூரத்தே கூவும் குயில்
சோகம் விளங்கவில்லை
தூதனுப்ப என் கையில்
வெண் புறாவும் இல்லை

புலரும் அந்தப் பொழுதினிலே
புள்ளினங்கள் பாடும்
புலம் பெயர்ந்து வாழுயிலும்
தாய் நிலத்தின் இரவின் மடி
மனதில் நிழல் ஆடும்.

● ஆவூரான்

## கே.எஸ். சுதாகர்

# "கள்ளனும் பொலிசும்"

மனம் ஏதோ சிந்தனையில் லயித்திருக்க, கார் தன்பாட்டில் போய்க் கொண்டிருந்தது. வடக்கு மெல்பேர்ணில் வேலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தேன்.

இரவு இரண்டு மணி. தெரு வெறிச்சோடிப் போய் இருந்தது. நன்றாகக் குடித்துவிட்டிருந்த ஒருவன் வீதியின் நடுவே நின்று தள்ளாடிக் கொண்டிருந்தான். கதவுகளை உட்புறமாகத் தாழிட்டுக் கொண்டேன். வேகத்தைக் குறைத்து ஓரமாகக் காரைச் செலுத்தும் போதுதான், எனக்குப் பின்னாலே ஒரு சிகப்புக்கார் வருவதைக் கண்டு கொண்டேன்.

அந்தக்கார் என்னை நெடுநேரம் பின் தொடர்ந்து வந்து கொண்டிருந்தது. இந்த இரவு நேரப் 'பின் தொடர்தல்' சிலவேளைகளில் ஆபத்தையும் கொடுக்கலாம். மீண்டும் ஒருமுறை அவனை நோட்டம் விட்டேன். வாட்டசாட்டமான ஒரு வெள்ளைக்காரன். எவனாக இருந்தாலென்ன? நிறையவே கொள்ளைக்காரன் - குடிகாரன் - குடுக்காரன் - கொலைகாரன் கதைகள் கேள்விப் பட்டிருந்தேன்.

அந்த இடத்தில், 'பலறாற்' வீதியில் பயணம் செய்யக்கூடிய அதி கூடிய வேகம் மணிக்கு 80 கிலோ மீட்டராகும். இந்த வேகத்தைத் தணித்து 50 இற்குக் கொண்டு வந்தால் அவனை சலிப்பூட்டச் செய்யலாம். ஆனால் அவன் தொடர்ந்தும் என் பின்னாலேயே வந்து கொண்டிருந்தான். வீதியில் மூன்று பாதைகள் இருந்தும், அவன் இப்படி என்னைப் பின் தொடர்வது எனக்கு அவன் மீது சந்தேகத்தைக் கொடுத்தது.

'..புற்ஸ்கிறேய்' வைத்தியசாலை வந்தது. இந்த இடமெல்லாம் எனக்கு அத்துப்படி. அடிக்கடி வைத்தியசாலை போய் வந்த அனுபவம். இந்த இடத்தில் காரை பானாப்படச் (ப) செலுத்தி மீண்டும் 'பலறாற்' வீதிக்கு எடுத்தால், அந்தக் கால தாமதத்தில் அவன் என்னைவிட்டு முந்திப் போய் விடுவான். காரை எந்தவித 'சிக்னலும்' இல்லாமல் வெட்டித் திருப்பினேன். என்னுடைய வெட்டுதலில் அவன் சற்றுத் திணறிப் போனான். பின்னர் காரை வைத்தியசாலை இருக்கும் பக்கம் மெதுவாகச் செலுத்தினேன். மீண்டும் 'பலறாற்' வீதியில் எடுக்கும்பொழுதுதான் - அவனும் என்னைத் தொடர்ந்து மெதுவாக 'பானாப்பட' வருவதை அவதானித்தேன்.

பயம் பிடிக்கத் தொடங்கியது. எண்பது ஓடக்கூடிய வீதியில் மணிக்கு நூறு என்ற வேகத்தில் ஓடத் தொடங்கினேன். இனி என்ன செய்வான் பார்க்கலாம்? ஆனால் ஒவ்வொரு முறையும் பாழாய்ப்போன சிக்னலில் நிற்க வேண்டியதாயிற்று. அப்படி நிற்கும்போது அவனும் பின்னாலே வந்து விடுகின்றான்.

அடுத்து வந்த சிக்னலில், நாலாபக்கமும் வேறு வாகனங்கள் இருக்கவில்லை. அப்படியே சிக்னலில் நிற்காமல் - 'ரெட்' லைற்றில் - அதே வேகத்தில் எடுத்துக் கொண்டேன். அவனும் சிக்னலில் நிற்காமல் வேக வேகமாக வந்து கொண்டிருந்தான். கார் - 'மெயிட்ஸ்ரோன்',

‘பிறேபுறூக்’, ‘சண்சைன்’, ‘ஆடியர்’ என்ற இடங்களிலெல்லாம் அதே நூறு வேகத்தில் ஓடி, நான் இருக்கும் இடமான ‘டியர்பார்க்’கை அடைந்தது. உள்ளேயிருக்கின்ற குறுக்குப் பாதைகளிலெல்லாம் காரை வெட்டி வெட்டி எடுத்தேன். அவனைக் காணவில்லை.

வீடு வந்ததும் ‘றிமோற் கொன்ரோலினால்’ கராஜின் கதவைத் திறந்து உள் புகுந்தேன். மீண்டும் கராஜின் கதவை மூடும்போது வீட்டு வாசலில் ஒரு கார் வந்து வேகமாக ‘பிரேக்’ போட்டு நின்றது. உடனே உள்ளே எரிந்து கொண்டிருந்த லைட்டை அணைத்தேன். சற்று நேரம் ஓசைப்படாமல் உள்ளே நின்றேன். நெஞ்சு திக்குத் திக்கென்றது. சற்று நேரத்தில் கராஜின் கதவை அவன் தட்டினான். நான் கராஜிற்குள்ளிருந்து வீட்டிற்குள் போகும் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனேன்.

உள்ளே மனைவியின் காதிற்குள் விஷயத்தை மெதுவாகச் சொன்னேன். வீட்டு விளக்குகள் எல்லாவற்றையும் பளீரென எரிய விட்டோம். ஏறக்குறைய கத்துவதற்கு ரெடி. அவன் வீட்டின் முன் கதவைத் தட்டி "நான் பொலிஸ்" என்றான். ‘எப்படி அவனை நாம் நம்புவது?’ இதுவரையும் ஒரு கள்ளனைப் போல என்னைப் பின்னாலே துரத்தியவனை எப்படி நான் பொலிஸ் என நம்புவது? "எவனாக இருந்தாலும் காலையில் வா!" என்றேன் நான்.

சொல்லிவிட்டு ஜன்னல் திரைச்சீலையை மெல்ல விலக்கி அவன் போய் விட்டானா எனப் பார்த்தேன். ஏதோ ஒரு சிறு பேப்பரில் பேனாவால் கிறுக்கி எழுதி எமது தபால் பெட்டிக்குள் போட்டுவிட்டுப் புறப்பட்டுச் சென்றான் அவன். மேலும் கொஞ்ச நேரம் தாமதித்துவிட்டு தபால் பெட்டிக்குள் போட்டிருந்த துண்டை எடுத்து வந்தேன்.

கூடிய வேகத்தில் ஓடியது, ‘சிக்னலில்’ நிற்காமல் ‘ரெட்’ லைற்றில் எடுத்தது போன்ற பல்வேறு காரணங்களிற்காக தண்டம் அறவிடப்பட்டிருந்தது. அவுஸ்திரேலியாவிற்கு வருமானத்தை ஈட்டித் தரும் அந்தத் தொழிலில் கள்ளனும் அவனே பொலிசும் அவனே!



### சிந்தனைக்கு

- ❖ வயதான கண்களில் தேவையான அளவு கண்ணீர் இருப்பதில்லை.
- ❖ நலம் என்பதை சூழ்நிலையைப் பொறுத்தே அளக்கவேண்டும்.
- ❖ சூதில் பயன்படும் பகடைக்காய்தான்.
- ❖ தனிமையாக இருப்பதைவிட என்னையே தவறாகப் பயன்படுத்தினேன்.
- ❖ பிறப்பால் யாரும் அடிமையில்லை.
- ❖ தேவை கழிந்தால் வேலிக்குப் புறத்தி.

## கவிதை

# வசந்த காலப் பொழுதுகள்..!

• ஆனந்

நடுப் பாலைவனத்தில்
நீர்நிலை கண்ட ஒட்டகம் மாதிரி ஒரு
களிவெறியுடன்
குதித்து வருகிறேன்!

வார விடுமுறைகளே..

உங்களை வாரி அணைக்க
நான் ஐந்து நாட்களாய்
பொசுக்கும் மணலில்
வெறுங்காலோடு நடந்திருக்கிறேன்!

எவனெவனோ கை பட்டு
சிந்திப்போன என்
வாழ்க்கைக் கோப்பையை
மறுபடி மீண்டும்
ஆனந்தத்தில்
நிறைத்துக் கொள்ள
வந்திருக்கிறேன்!

விடுமுறைகளே

உங்களுக்குத் தானே
என் வாழ்க்கையை
மொத்தமாய் உயிலெழுதித்
தந்திருக்கிறேன்!

அலாரத்தின்
அதிகாலை
அலறல்..

போக்குவரத்தின்
போராட்ட
நெரிசல்..

சிதறி ஓடும்
நொடித் துளிகளோடு
நடக்கிற பந்தயத்
துரத்தல்..

அலுவலக முகங்களின்
புலம்பல்..
பிதற்றல்..
கதறல்..
கூக்குரல்..

அடடா அடடா அடடா
அத்தனையும்
மூட்டைக் கட்டி
வானத்தில்
விட்டெறிந்து..

மறுபடி மீண்டும்
வாழ்க்கையில் வந்து விழும்
இரண்டு நாள்
அவகாசத்துக்குள்..

தென்றலில் தவழும்
காகிதச் சீட்டு மாதிரி
மனசு மிதக்கிறது
ஆனந்தத்தில்!

தண்ணீரில் மிதக்கும்
அனுபவம் மாதிரி
உடம்பு தவழ்கிறது
பேரின்பத்தில்!

வாரத்தில் ஐந்து நாள்
வாழ்க்கையைச்
செலவழித்து - என்
வங்கிக் கணக்கில்
வரவு வைக்கிறேன்..

வாரத்தில் இரண்டு நாள்
வங்கிக் கணக்கைச்
செலவழித்து - என்
வாழ்க்கை கணக்கில்
வரவு வைக்கிறேன்..

வார தினங்களே
உங்கள் வருகையெல்லாம்
என்
வங்கிக் கணக்கில்
வெறும்
வரவுகளாக!

வார விடுமுறைகளே
உங்கள் வருகையெல்லாம்
என்
வாழ்க்கை கணக்கில்
வரங்களாக!

கட்டுரை



# தமிழில் குழந்தை இலக்கியம்

முருகபூபதி

குழந்தை இலக்கியம் மேனாட்டு மொழிகளில் வளர்ச்சிபெற்ற அளவுக்கு தமிழில் வளரவில்லை. அல்லது வளர்க்கப்படவில்லை. முன்னொரு காலத்தில் எமது தாயகத்தில் பாட்டிமார் தமது பேரப்பிள்ளைகளுக்கு கதை சொல்லும் மரபு இருந்தது. ஆனால் இப்போது பாட்டிமாரும் பேரப்பிள்ளைகளும் தொலைக்காட்சி நாடகங்கள் பார்ப்பதில்தான் ஆர்வம் காட்டுகின்றனர்.

இன்றும் நாம் முன்னர் சிறுவயதில் படித்த அல்லது கேட்ட பாட்டிமார் சொல்லித்தந்த கதைகளை நினைவில் வைத்து போற்றுகின்றோம். எமது குழந்தைகளுக்கும் அவற்றை திருப்பிச்சொல்ல முயற்சிக்கின்றோம்.

ஆனால் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் தற்காலத்திய வீடியோ கேம் எனப்படும் கணினி தொழில் நுட்பமும் அவர்களை எம்மிடமிருந்து அந்நியப்படுத்திக் கொண்டிருக்கின்றன. புகலிட நாடுகளில் வளரும் குழந்தைகளுடன் இந்த வீடியோ கேமும் நாளொரு வண்ணமும் பொழுதொரு கோலமுமாக வளர்ந்து எமது குழந்தைகளை ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறது.

சில வருடங்களுக்கு முன்னர் எமது பெண் உறவினர் ஒருவர் ஜேர்மனியிலிருந்து விடுமுறைக்காக தனது இரண்டு ஆண் குழந்தைகளுடன் எங்களிடம் வந்து சுமார் ஒரு மாத காலம் தங்கியிருந்தார். பகல் பொழுதில் எனது பிள்ளைகளுடன் விளையாடுவார்கள். இரவானதும் படுக்கைக்குச்சென்று தமது தாயின் வருகைக்காக காத்திருப்பார்கள்.

ஏன் தெரியுமா?

அந்தத்தாயார் ஜெர்மனியிலிருந்து தனது குழந்தைகளுக்காக எடுத்துவந்த ஒரு புத்தகத்துடன் அவர்களுக்கு அருகிலிருந்து அதிலிருந்து ஒரு கதையை அபிநயத்துடன் வாசிப்பார். அதனைக்கேட்டு ரசித்துவிட்டு குழந்தைகள் உறங்கிவிடுவார்கள். இதனை Bed Time Stories என்று அழைக்கின்றார்கள்.

எனக்கு சின்னஞ்சிறு வயதில் எனது பாட்டி சொல்லித்தந்த கதைகளையே பின்னர் நான் எழுத்தாளனாகியதும் 'பாட்டி சொன்ன கதைகள்' என்ற தலைப்பில் எனது அனுபவங்களையும் சிந்தனைகளையும் கலந்து எழுதினேன். பிரான்ஸில் வெளியான 'தமிழன்' என்ற இதழில் தொடராக வெளியானது. பின்னர் குறிப்பிட்ட கதைகள் தனித்தொகுதியாகி நூலுருப்பெற்று தமிழ் நாட்டில் வெளியானது.

இந்நூலை தமிழக நூலக அபிவிருத்தி சபை, சிறுவர் இலக்கிய வரிசையில் தேர்வு செய்து சுமார் 1500 ஆரம்ப பாடசாலைகளுக்கு விநியோகித்தது.

அதில் சில கதைகளை எனது மகன் இங்கு 4 வயதில் வந்தபோது அவன் உறங்கச்செல்லும் வேளையில் சொல்லிக்கொடுத்திருக்கிறேன். பின்னர் அவன் தனது ஆரம்பவகுப்பிற்கு பாடசாலை சென்றபோது தனது வகுப்பில் தரப்பட்ட ஒரு நூல் எழுதும் பயிற்சியின்போது குறிப்பிட்ட பாட்டி சொன்ன கதைகளை ஆங்கிலத்தில் எழுதி அவற்றுக்கு படங்களும் வரைந்து புள்ளிகள் பெற்றான்.

குழந்தை இலக்கியம் ஒருவகையில் மரதன்

ஓட்டம் போன்றது. எமது முன்னோர்களினால் சொல்லப்பட்டதை நாம் உள்வாங்கி கிரகித்து மனதிலிருத்தி எமது சந்ததியிடம் பகிர்வது. இது தொடர் சங்கிலியாக வளர்வது.

புகலிட வாழ்வில் தாய்க்கு ஒரு நேரம் வேலை, தந்தைக்கு பிறிதொரு நேரம் வேலை. இருவருமே ஒரே நேரத்தில் வேலைக்குச்சென்று வீடு திரும்பினாலும் தமது பிள்ளைகளுடன் நேரத்தை கழிக்க முடியாமல் இயந்திரமாகிவிடும் நடைமுறை வாழ்வு.

வாராந்த விடுமுறை நாட்களில் பல்வேறு குடும்ப மற்றும் சமூக நிகழ்வுகள். இவற்றுள் அரங்கேற்றம், விழாக்கள், ஒன்றுகூடல்கள், விருந்துகள், பிறந்தநாள் கொண்டாட்டங்கள் உள்ளடக்கம்.

இதுவே தொடர்கதையாகிவிடும்போது குழந்தைகளுக்கு Bed Time Stories சொல்லிக்கொடுக்க அவர்களுக்கு எங்கே நேரம்.

எனவே இதுபற்றி எம்மவர்கள் சற்று நேரம் ஒதுக்கி சிந்திக்கவேண்டும். குழந்தை இலக்கியம் எமது குழந்தைகளை நற்பிரஜைகளாக்கும். இங்கு வாழும் எழுத்தாளர்கள் இதுபற்றியும் யோசிக்க வேண்டும்.

## ஓரெழுத்து சொல்

**- மௌலீ**

தமிழில் உள்ள மொத்த எழுத்துக்கள் 247, இந்த 247 எழுத்துக்களில் 42 எழுத்துக்கள் ஓரெழுத்து சொல்லாக விளங்குகின்றன அதாவது இந்த 42 எழுத்துக்களுக்கும் தனியாக பொருள் உண்டு. அவற்றைத் தெரிந்து கொள்வோம்.

அ - எட்டு
ஆ - பசு
ஈ - கொடு, பறக்கும் பூச்சி
உ - சிவன்
ஊ - தசை, இறைச்சி
ஏ - அம்பு
ஐ - ஐந்து, அழகு, தலைவன், வியப்பு
ஓ - வினா, மதகு - நீர் தாங்கும் பலகை
கா - சோலை, காத்தல்
கூ - பூமி, கூவுதல்
கை- கரம், உறுப்பு
கோ - அரசன், தலைவன், இறைவன்
சா - இறப்பு, மரணம், பேய், சாதல்
சீ - இகழ்ச்சி, திருமகள்
சே - எருது, அழிஞ்சில் மரம்
சோ - மதில்
தா - கொடு, கேட்பது
தீ - நெருப்பு
து - கெடு, உண், பிரிவு, உணவு, பறவை இறகு
தூ - வெண்மை, தூய்மை
தே - நாயகன், தெய்வம்
தை - மாதம்
நா - நாக்கு
நீ - நின்னை
நே - அன்பு, நேயம்
நை - வருந்து, நைதல்
நொ- நொண்டி, துன்பம்
நோ- நோவு, வருத்தம்
நௌ- மரக்கலம்
பா - பாட்டு, நிழல், அழகு
பூ - மலர்
பே - மேகம், நுரை, அழகு
பை - பாம்புப் படம், பசுமை, உறை
போ - செல்
மா - மாமரம், பெரிய, விலங்கு
மீ - ஆகாயம், மேலே, உயரம்
மு - மூப்பு
மூ - மூன்று
மே - மேன்மை, மேல்
மை - அஞ்சனம், கண்மை, இருள்
மோ - முகர்தல், மோதல்
யா - அகலம், மரம்
வா - அழைத்தல்
வீ - பறவை, பூ, அழகு
வை- வைக்கோல், கூர்மை, வைதல், வைத்தல்
வௌ-கௌவுதல், கொள்ளை அடித்தல்

**நன்றி - முகநூல்**

கல்லோடைக்கரன்

# ஒரு குழந்தை வளர்கிறது

அது ஓர் ஆடி மாதத்தின் ஒரு வேலை நாள்.

ஆடி மாதம் பிறந்து விட்டாலே தாயகத்தில் பல நிகழ்வுகள் ஆரம்பமாகிவிடும். சுப காரியங்கள் ஆடி மாதத்தில் செய்யப்படுவதில்லை என்றாலும் ஆடிப் பிறப்பு, ஆடிக் கூழ், ஆடிப் பட்டம், ஆடிப்பூரம், ஆடி அமாவாசை, அம்மன் கோயில் சடங்கு என்று பல நிகழ்வுகள் நடக்கும். ஆனால், அதற்கு முற்றிலும் மாறுபட்ட, முரண்பாடான சூழ்நிலையில், கடுங்குளிர் காலத்தின் நடுப்பகுதியில் விக்டோரிய மாநிலம் மூழ்கிப் போயிருந்தது.

வேலைக்கே அடிமையாகிப்போன மக்களைப் போல, ஒரு வித இயந்திர பாணியில் வேண்டா வெறுப்போடு மெல்பேர்ண் நகரம் விழித்தெழுகிறது. பனிப்புகாரைக் கிழித்து வெளிவரத் துடிக்கும் சூரியனின் ஒளிக்கற்றைகள் முற்று முழுதாக வெளிவருவதற்கு முன்பேயே கடிகார மணி அலற ஆரம்பிக்கிறது.

வேலைக் களைப்பின் மிகுதியால் அசந்து தூங்கிக் கொண்டிருந்த ஜனாவின் வலக்கரம் தட்டுத் தடுமாறி அலாரத்தை நிறுத்துகிறது.

“ம்..ம்..அதற்குள் விடிந்து விட்டதா? இன்னும் ஐந்து நிமிடம் படுப்பம்”..” என்று முனகியபடியே அவள் திரும்பிப் படுக்கிறாள். கண்களைத் திறக்கக்கூட முடியாமல் நித்திரை அவளை அமுக்கினாலும், மனம் மட்டும் பதைபதைத்தது. “ஐயோ.. நேரமாச்சு” ஏழு மணிக்கு வேலை.. இப்ப எழும்பினால்த்தான் அவருக்கும் பிள்ளைக்கும் சாப்பாடு செய்து வைச்சுப்போட்டு 6.30 மணி பஸ்ஸைப் பிடித்து வேலைக்குப் போகலாம்” எழும்புவம்..” “தனக்குள்ளேயே முணுமுணுத்தபடி தன்னைத் தானே வலிந்து எழுப்பிக் கொள்கிறாள் ஜனா.

உடனே மகளின் ஞாபகம் வரவே, கண்களைக் கசக்கியபடியே கட்டிலில் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்த ரூபிணியைப் பார்க்கிறாள். நான்கு வயதுகள் நிரம்பிய அக் குழந்தைக்கு தன் தாயைப் போல வேலைப் படபடப்பு, இயந்திர வாழ்வு என்பன இல்லை என்றாலும் அதே இயந்திர மயமான சுழற்பொறிக்குள் தானும் விழுந்து விடப் போகிறோமே என்ற சிந்தனை சிறிதும் இல்லாமல் உறங்கிக் கொண்டிருந்தது. வாஞ்சையாக, முழு அன்பையும் வெளிக்காட்டிக் கொள்ளக்கூட நேரமில்லாத அவசரத்தில், மகளின் தலையைத் தடவிக் கொடுத்தபடியே ஜனா எழுந்திருக்கிறாள். அடுத்த இரண்டு மணி நேரத்துக்கு அவளுக்கு உலக ஞாபகமே இருக்காது. சமையல், பாத்திரங்கள் துப்பரவு, ரூபிணி கின்ரகாடன் போவதற்கான பையில் உணவு, சுத்திகரிப்பு உடைகள், கணவன் ரவிக்குரிய உணவு, குளியல், தனக்குண்டான உணவு ஒழுங்கு, உடையணிந்து தயாராதல் என்பன போன்ற விலங்குகளால் தன்னைத்தானே இறுகப் பூட்டிக் கொண்டு வேலைக்குப் போக வாசற்படிக்கு ஜனா வரவும், கணவன் ரவி இரவு வேலை முடிந்து கராஜ்ஜுக்குள் காரை நிறுத்தி விட்டு உள்ளே வரவும் சரியாக இருந்தது.

“Good Morning, வேலைக்கு வெளிக்கிட்டீங்க போல..? “ என்ற கணவனின் கேள்விக்கு

ஆற அமரப் பதில் கூற அவளால் எப்படி முடியும் ? " இஞ்ச, ரூபிணி தூங்கிறாள். மேசையில சாப்பாடு இருக்கு, பிறிச்சுக்குள்ளயும் இருக்கு, Warm பண்ணிச் சாப்பிடுங்க. பிள்ளைக்கும் சாப்பாட்டை கொடுத்து வெளிக்கிடுத்தி கின்ரகாடின்ல கொண்டு விட்டுட்டு கூட்டிட்டு வாங்க. நித்திரை கொண்டுடாதீங்க. ஏலுமெண்டா பிறகு அடிக்கிறன், சரியாப்பா?. கடகடவென்று பேசிக் கொண்டே பஸ்ஸை ப் பிடிப்பதற்காக தெருவில் இறங்கி வேகமாக நடக்கிறாள்ஜனா. அவள்செல்வதையேபார்த்துக் கொண்டு நின்ற ரவி, தன்னையறியாமலேயே வெளிப்பட்ட பெருமூச்சுடன் தலையை அசைத்தவாறே வீட்டினுள்ளே செல்கிறான்.



சுமார் இரண்டு மணி நேரத்துக்கு முன்பாக ஜனா பட்ட அதே பாடுதான் இப்போது ரவிக்கும். ஆனாலும் அவளோடு ஒப்பிடும்போது இது மிக மிகக் குறைவு என்றுதான் சொல்லவேண்டும்.

ரவி அவசர அவசரமாகக் குளிக்கிறான். சில வேலைகளை முடிக்கிறான். மகள் ரூபிணியை எழுப்பி, குளிப்பாட்டி, அரைகுறையாக அலங்கரித்து அவளை பாலர் வகுப்புக்குக் கூட்டிச் செல்கிறான். பரக்கப் பரக்க சில வங்கி வேலை, பில்ஸ் செலுத்துதல் என்று ஒரு சில வேலைகளைச் செய்து முடிக்கிறான். வீட்டுக்கு முன்னாலும் பின்னாலும் புற்கள் காடு போல வளர்ந்து கிடந்தாலும் " பிறகு பாப்பம்.." என்று தனக்குத்தானே சமாதானம் சொன்னவனாய் படுக்கைக்குச் செல்கிறான் ரவி. இரவு முழுவதும் பிடித்து வைத்திருந்த நீண்ட உறக்கம் அவனை உடனேயே ஆட்கொண்டு விடுகிறது.

...நண்பகல் மணி 12.30.

அரைத்தூக்கத்தில் தூக்க மயக்கம் கலையாமலேயே அவசர அவசரமாக எழுந்து சென்று ரூபிணியை அழைத்து வருகிறான் ரவி. மகளைக் கவனித்து சாப்பாடு கொடுத்துவிட்டு " விளையாடுங்க மகள்.." என்று ஒரு அன்பான கட்டளை பிறப்பித்துவிட்டு சோபாவில் அமர்ந்தவன் தன்னையறியாமலேயே தூக்கத்தில் ஆழ்ந்து விடுகிறான்.

குழந்தை ரூபிணி காட்டூன் படத்தை இடையிடை பார்த்த படியும், சில விளையாட்டுப்பொருட்களோடு விளையாடிக் கொண்டும் பொழுதைக் கழிக்கிறாள்.

மயான அமைதியும் சூனியமும் அந்த வீட்டை ஆழ்ந்து கொண்டிருக்க, கலகலப்பு வேடிக்கை வினோதம் சிரிப்பு கும்மாளம் பாட்டி பாட்டன் பக்கத்து வீட்டுக் குழந்தைகள் என்று எதுவுமே தெரியாமலும், சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு சாயமயிலே சாய்ந்தாடு, ஆராரோ ஆரிவரோ கண்மணியே கண்ணுறங்கு, அம்புலி மாமா வா..ஆனை ஆடுமாம் பிள்ள ஆனை ஆடுமாம். என்ற தாலாட்டுப் பாடல்கள், என்ர செல்லக்குஞ்சு என்ர தங்கக் கட்டி..என்ற அன்பு வார்த்தைகள் ஏதுமின்றியும் ரூபிணி விளையாடிக் கொண்டிருக்கிறாள்..இல்லை.. சூனியத்தோடு சங்கமமாகிக்கொண்டிருக்கிறாள். தாய்த்தமிழ் மொழிக்குப் பதிலாக காட்டுன் படத்திலிருந்து வரும் ஆங்கிலச் சொற்கள் அவள் பிஞ்சு மனத்தில் பதிவாகிக் கொண்டிருக்கிறது.

மாலையானதும் தனது தாயார் வீடு வந்து பரக்கப்பரக்க வீட்டு வேலைகள் செய்யப் போகிறாள் என்பதும், தந்தை ரவி இன்னும் சிறிது நேரத்தில் இரவு வேலைக்குப் போகப் போகின்றார் என்பதும், தனது பெற்றோர் வாசற்படியில் " ஹாய் " சொல்லப் போகிறார்கள் என்பதும், தன்னை விரைவாக உறங்க வைத்து விட்டு தாயார் தனது வேலைகளில் ஈடுபடப் போகின்றாள் என்பதும் பிஞ்சுக் குழந்தை ரூபிணிக்கு எங்கே புரியப் போகிறது ? ஆனாலும் அந்தக் குழந்தை வளர்ந்து கொண்டிருக்கிறது.!

கவிதை

# நாளை வரும்

ஆழியாள்

எல்லாக் கதவுகளையும்
எங்களின்
முகத்தில் அடித்து மூடுங்கள்!

எங்களுக்கான ஜன்னல்களை
அறைந்து சாத்துங்கள்!

காற்றுப் புகும் வழிகளையும்
வெளிச்சம் கசியும் எல்லாத் துளைகளையும்
இறுக்கி அடையுங்கள்!.

உங்களில் எவர் தன்னும்
எங்கள் பாண் துண்டுகளுக்கு
தித்திக்கும் பழுப்பாகையோ -ஒரு கரண்டி
வெண்ணையையோ பூசாதீர்கள்!

குளிரில் வெடவெடுக்கையில்
எங்களுக்கான கையுறைகளை நீட்டாதவர்களே!
பஞ்சுச் சப்பாத்துக்களையும் - எங்கள்
காதுகளை மூடும் கம்பளித் தொப்பிகளையும்
ஒளித்து வைப்பவர்களே!

எங்களைப் பாரா முகமாய் இருங்கள்
எங்களைப் பாரா முகமாய் இருங்கள்
நாங்கள் கேட்பதெல்லாம்
எங்களை முற்றிலுமாய்க் கைவிடுங்கள்
என்பதைத்தான்.

எங்களுக்கே உரித்தான
கடுந்தேநீர்க் கோப்பைகள் அத்தனையும்
நொறுங்கிச் சிதறிக் கிடக்கின்றன

எங்களுக்கே உரித்தான
மழைக்கால அங்கிகள்
ஈரமாயும் பெரும் பாரமாயும் அழுத்துகின்றன

எங்களுக்கான
எல்லாக் கதவுகளையும்
முகத்தில் அடித்து மூடுபவர்களே!

எங்களுக்கான ஜன்னல்களை
அறைந்து சாத்துபவர்களே!

காற்றுப் புகும் வழிகளையும்
வெளிச்சம் கசியும் எல்லாத் துளைகளையும்
இறுக்கி அடைப்பவர்களே!

எங்களை முற்றிலுமாய்க் கைவிடுங்கள்
எங்களை முற்றிலுமாய்க் கைவிடுங்கள்

அப்போதுதான்
கடும் உறை குளிரிலும்
பிரிண்டபெல்லா மலைக்காடுகளை அண்டாத
பண்டுலக்ஸ் கிளிகளுக்குக்
கிட்டியது போல்,

எங்களுக்கான தானியங்கள்
விளைந்து,
இறைந்து கிடக்கும் நாட்கள் வரும்
எங்களுக்கான நகரங்கள் எழும்
நாட்கள் வரும்.



திருமதி கலா சிவகுமாரவேலு

# சிதைந்த ஓவியம்

அதோ! மாங்குடி கிராம வீதிகளில் விரித்த தலையும், மெலிந்த உடலும், அழுக்கடைந்த ஆடைகளுடன் "என்ர குஞ்சுகளா! இன்றைக்கு நேரத்தோடை பள்ளிக்கூடம் விட்டு வாங்கோ. அப்பா! நீங்களும்தான். இன்றைக்கு கடையிலிருந்து கெதியாய் வந்திடுங்கோ. நாங்க கோயிலுக்குப் போகவேணும்" என்று தன்பாட்டில் அடிக்கடி சொல்லிக் கொண்டு பைத்தியம்மாதிரி திரிகிறாளே ஒரு பெண். அவள்தான் சாந்தி. அவளது இன்றைய இந்நிலைக்குக் காரணம்தான் என்ன? காலனின் கொடூரவிளையாட்டா, அல்லது காலத்தின் கட்டளையா?

மாங்குடிக் கிராமம் வன்னிமாவட்டத்தில் இயற்கைவளம் கொஞ்சிவிளையாடும் வளம் மிக்க ஓர் கிராமம். அக்கிராமத்தில் சுமாரான வசதிகளுடன் வாழ்ந்த குடும்பம்தான் இந்த அபலைப் பெண்ணின் குடும்பம். இவளது கணவன் ரமேஷ் பலவாணிப நிறுவனம் ஒன்றின்உரிமையாளன். இவர்களுக்கு மயூரன், மதுமிதா என கண்ணின் மணிகள்போல இரு குழந்தைச் செல்வங்கள். "இது ஆனந்தம் விளையாடும் வீடு, நான்கு அன்றில்கள் உயிர்வாழும் கூடு" என ஆனந்தமயமாக வாழ்ந்துகொண்டிருந்த அக்குடும்பத்தில் ஒரு நாள், ஒரே நாளில் பேரிடிபோன்று நடந்த இரு சம்பவங்களே அவளது இந்நிலைக்குக் காரணம்.

அன்றொருநாள் காலைப்பொழுதில் "மயூ! மது! கிணற்றடியில இரண்டு பேரும் என்ன சண்டை பிடிக்கிறீங்க? கெதியில வாங்கோ, பள்ளிக்கூடத்துக்குப் போக நேரமாகுது" எனச் சாந்தியின் குரல் கேட்டதும், "அம்மா! அக்காவைப் பாரம்மா. நான் கறுப்பாம். தான்தான் வீட்டிற்குள்ளேயே வெள்ளையாம். நீ கறுப்பன்தானே என்று சொல்லிப் பகிடி பண்ணுறா" என மயூரன் அழுதபடி கூற, "ஓம்ஓம்! அதுக்கென்ன ஆனை கறுத்தாலும் ஆயிரம் பொன்.என்ர ராசா!நீ என்ரை ராஜகுமாரன்.கெதியாய் வா அப்பன்" என்றாள் சாந்தி.

"இதோ வந்திட்டோம், அம்மா. அம்மா! இன்றைக்கு காலைச்சாப்பாடு என்னம்மா?" எனக்கேட்ட குழந்தைகளைப் பார்த்து "உங்களுக்கு விருப்பமான புட்டும் கிழங்குச் சொதியும் வைத்திருக்கிறன். கெதியாய் சாப்பிடுங்கோ, செல்லங்களே! தம்பி மயூ, அக்காவும் நீயும் பள்ளிக்கூடம் விட்டதும் அங்கஇங்க பிராக்குப் பார்க்காமல் கெதியில வரவேணும். இன்றைக்கு எனக்கும் உங்கட அப்பாவிற்கும் கலியாணம் நடந்த நாள். நாங்க எல்லாரும் இன்றைக்கு கோயிலுக்குப் போகவேண்டும்" எனச் சாந்தி கூறியதைக் கேட்டதும், பிள்ளைகள் இருவரும் "அம்மா! அப்ப இன்றைக்கு என்ன விசேஷமாய்ச் சமைக்கப் போறீங்க?" என, தாயைக் கட்டியணைத்தபடி கேட்டனர். "அதெல்லாம் இப்ப சொல்லமாட்டன். சாப்பிடும்போது தெரியும்தானே" என்று செல்லமாகப் பிள்ளைகளைப் பார்த்து சாந்தி கூறினாள்.

பிள்ளைகள் இருவரும் விடைபெற்றுச் சென்றதும்கணவனைநோக்கி"அப்பா! கடைக்கு வெளிக்கிட்டீட்டீங்களா, வாங்கோவென் சாப்பிட" என அன்புடன் அழைத்த சாந்தியின் குரலைக் கேட்ட ரமேஷ், "சாந்திக்குஞ்சு! இன்றைக்கு நீயும் என்னோடை சேர்ந்து சாப்பிடவாவன். உன்னைப் பார்த்தால் கலியாணமாகிப் பத்து வருஷம் என்று சொல்லமுடியாது. அன்றைக்கு நான் பார்த்த மாதிரியே இன்றைக்கும் இருக்கிறாய்" என அன்பொழுகக் கூறினான்.

சாந்தி சிறிது வெட்கப்பட்டபடி "போங்கப்பா! உங்களுக்கு எப்பவும் பகிடிதான்" என்றாள். "அதுசரி சரி சாந்தி, நான் வாங்கித் தந்த சாரிக்கு பிளவுஸ் தைத்து விட்டியோ? இன்றைக்கு

கோயிலுக்கு அதைத்தான் கட்டாயம் கட்டவேண்டும். இது என் அன்புக் கட்டளை" என சிரிப்புடன் மனைவியைப் பார்த்துக் கூறிக்கொண்டே வெளிக்கிட்ட ரமேஷ், "என்னவோ தெரியவில்லை, இன்றைக்கு கடைக்குப் போக மனமில்லாமலிருக்குது. உனக்குப் பக்கத்திலேயே இருக்கவேண்டும் போலிருக்கு, சாந்தியம்மா!" எனக்கூறினான். அதைக்கேட்ட சாந்தி மனதிற்குள் மகிழ்ந்தபடியே, "ஆசையைப்பாரு, இன்றைக்கு என்ன புது மாப்பிள்ளை என்னும் நினைப்போ? அதெல்லாம் சரிவராது. இன்றைக்குச் சந்தைநாள், கடையில வியாபாரம் அதிகமாக நடக்கிற நாள் அல்லவா? எனவே போய்விட்டு கெதியாய் வாங்கோ" எனக் கூறிக்கொண்டிருக்கும்பொழுதே "சாந்தியம்மா! நெஞ்சுக்குள்ள லேசா வலிக்கிறமாதிரி இருக்கு. கொஞ்சம் இஞ்சி போட்டு வெறுந் தேத்தண்ணி ஊற்றித்தா" என்று சொல்லிக்கொண்டே கதிரையில் அமர்ந்தான் ரமேஷ்.

"இப்ப கொஞ்ச நாளாய் அடிக்கடி நெஞ்சு வலிக்குது என்று சொல்லுறீங்களே தவிர, வாங்கோ யாழ்ப்பாணம் போய் யாராவது நல்ல டாக்டரிடம் காட்டுவோம் என்றாலும் வர மாட்டேன் என குழந்தைபோல அடம் பிடிக்கிறீங்க" எனச் சொல்லியபடியே தேநீரைத் தயாரித்துக் கொடுத்த சாந்தியைப் பார்த்து, "ஓம். நீ பெரிய டாக்டருக்குப் படிச்சவதானே. உனக்குத் தெரியாததா! சும்மா போம்மா, அது வாய்வு. பயப்படுகிறமாதிரி ஒன்றுமில்ல" என்று கூறியவாறு தேநீரைப் பருகிமுடித்த ரமேஷ் சைக்கிளில் தன் கடையைநோக்கிப் போகத்தொடங்கினான். சாந்தியும் தன் திருமணநாளையும் அந்த இனிமையான நினைவு களையும் நினைத்து மகிழ்ந்தவண்ணம் வீட்டு வேலைகளைச் செய்யத் தொடங்கினாள். பாவம், விதியின் விளையாட்டை யார்தான் அறியமுடியும்?

அப்பொழுது அவர்கள் வீட்டுப்படலையை யாரோ தட்டும் சத்தம் கேட்டது.

"ஓம், ஓம்! இதோ வாறன்" என்று சொல்லியபடியே சாந்தி படலையைத் திறந்தாள். அங்கே பக்கத்துவீட்டுக் கமலா நின்றுகொண்டிருந்தாள். "என்ன சாந்தி! என்றைக்கும் இல்லாதவாறு உன்ரை மனிசன் இன்றைக்கு விசிலடித்துக்கொண்டு சிரித்த முகத்தோட கடைக்குப் போறார்! உனக்கு ஏதேனும் விசேஷமோ?" எனக் கேட்க, "அப்படியெல்லாம் ஒன்றுமில்லை" என்று சாந்தி சொல்லிமுடிப்பதற்குள் வானத்தில் குண்டுவீச்சு விமானத்தின் பேரிரைச்சல் கேட்கத் தொடங்கியது. "என்ன கமலாக்கா! கன நாளைக்குப்பிறகு இந்த ஆட்கொல்லி விமானத்தின்ர சத்தம் கேட்குது? ஏதேனும் பிரச்சினையோ? பாழ்படுவாங்கள் எங்க போடப்போறாங்களோ தெரியவில்லை" என்று வேதனையுடன் சாந்தி சொல்லிக் கொண்டிருக்கும்போதே "டமார், டமார், டமார்" என்று அடுத்தடுத்து குண்டுகள் விழும் சத்தம் கேட்டது.

கொஞ்ச நேரத்தில் சாந்திக்கு நன்குதெரிந்த சுதன் என்னும் பெடியன் பதறியபடி

ஓடிவந்து "அக்கா! சாந்தியக்கா! நான் என்னவென்று சொல்லுவேன். விமானத்திலிருந்து விழுந்த குண்டுகளிலொன்று மாங்குடி மகாவித்தியாலயக் கட்டிடத்திலை விழுந்ததாம். அதில் சில பிள்ளைகள் படுகாயமடைந்து அவர்களை வைத்தியசாலைக்குக் கொண்டு போயிட்டினமாம். உங்கடை இரண்டு பிள்ளைகளுக்கும் காயம் என்றும், அவர்களையும் கொண்டு போய்விட்டதாக பாடசாலை அதிபர் சொன்னதைக் கேட்டு நான் பதறியடித்துக் கொண்டு ஓடி வந்தனான் அக்கா உங்களிடம் செய்தியைச் சொல்ல" எனக் கூறியதைக் கேட்டதும் "ஐயோ! என்ர தெய்வமே! நான் பெற்ற செல்வங்களுக்கு அப்படியொன்றும் நடந்திருக்கக்கூடாது" என்று அலறியவளாய் கூக்குரலிட்டு அழத் தொடங்கினாள் சாந்தி.

"தம்பி சுதன்! தயவுசெய்து கடையிலபோய் அவரிட்ட இந்தச்செய்தியைச் சொல்லிவிடடா"

எனக்கூறியபடியே "கமலா அக்கா! எனக்குக் கையும் ஓடுதில்லை, காலும் ஓடுதில்லை. என்னோடை ஒருக்கா வைத்தியசாலைக்கு வாங்கோ" என்று சொல்லிக்கொண்டே வீட்டையும்

பூட்ட மறந்தவளாய், வைத்தியசாலையை நோக்கி ஓட்டமும் நடையுமாகச் சென்ற சாந்தி, அங்கு வேலைசெய்துகொண்டிருந்த நர்ஸிடம் "அம்மா! மாங்குடிகிராமப்பள்ளிக்கூடத்திலிருந்து குண்டுவீச்சில காயமடைந்த பிள்ளைகளை இங்கை கொண்டு வந்தினமாம், எங்கேயம்மா அவர்களை வைத்திருக்கிறார்கள்?" என அழுதபடியே கேட்டாள்

"அம்மா! அழாதேயுங்கோ! உங்கடை பிள்ளைகளின் பெயரைச் சொல்லுங்கோ" எனக்கேட்ட நர்ஸிடம் சாந்தி பெயர்களைச் சொன்னதும், சாந்தியைப் பரிதாபமாகப் பார்த்த நர்ஸ் "அம்மா! நான் என்னவென்று சொல்வேன்! அவர்களிருவரையும் படுகாயத் தோடதான் இங்கு கொண்டுவந்தார்கள். நாங்களும் அவர்களைக் காப்பாற்ற எவ்வளவோ முயற்சிகள் செய்தோம். ஆனால் எங்களால் முடியவில்லை அம்மா! இதற்குமேல் நான் என்னவென்று அம்மா சொல்லுவேன்" எனக் கவலையுடன் கூறினாள்.

நர்ஸ் கூறியதைக் கேட்ட அடுத்த நிமிடம் "ஐயோ! என்ர தெய்வ மே! ஏனப்பா எனக்கு இந்தச் சோதனை! என்ர குஞ்சுகள் இல்லாமல் நான் எப்படி உயிர் வாழ்வேன்" என வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு சாந்தி அழுதுகொண்டிருக்கும்பொழுது, வேகம் வேகமாக மீண்டும் சாந்தியை நோக்கி வந்த சுதன், "சாந்தியக்கா! ஏனக்கா உங்களுக்கு இன்றைக்கு இப்படி வேதனைக்குமேல் வேதனையாக நடக்கின்றதோ தெரியவில்லை. நீங்க சொன்னமாதிரி நான் ரமேஷ் அண்ணனிடம் நடந்த சம்பவத்தைச் சொல்லி, நீங்கள் வைத்தியசாலைக்குப் போவதாகவும், அவரையும் அங்கு வரச் சொன்னதாகவும் சொன்னவுடனேயேநெஞ்சைப் பிடித்துக் கொண்டு கீழே விழப்போனரமேஷ்ண்ணாவை அங்கிருந்த சிலரின் உதவியோட இங்க கொண்டுவரும்பொழுது வழியிலேயே ...." எனச் சொல்லியபடி அழத்தொடங்கினான்.

"என்னடா? என்ர தலையில நீயும் குண்டைத் தூக்கிப்போடுறாய்! நடந்ததைச் சொல்லடா" என அவனைநோக்கிகையெடுத்துக் கும்பிட்ட சாந்தியிடம், "அக்கா! நீங்க என்னைக் கும்பிடாதேயுங்கோ. அந்தத் தெய்வத்தைத்தான் கேளுங்கோ, ஏன் உங்களை இப்படிச் சோதிக்கிறார் என்று. உங்களிடம் நான் எப்படியக்கா சொல்லுவது? வைத்திய சாலைக்கு வரும் வழியிலேயே ரமேஷ்ண்ணா இறந்துவிட்டார். அவருடைய உடலைத்தான் இங்கு கொண்டுவந்திருக்கிறோம்." என சுதன் கூறிய அடுத்த வினாடி, "ஐயோ தெய்வமே! என்று சொல்லிக்கொண்டே நிலத்தில் விழுந்து புரண்டுபுரண்டு அழுத சாந்தி சிறிது நேரத்தில் மூர்ச்சையானாள். வைத்தியர்கள் அவளைச் சுயநிலைக்குக் கொண்டுவர எவ்வளவோ சிகிச்சை அளித்தும் பயனளிக்காமல் இரண்டு நாளைக்குப் பின்னர்தான் சாந்தி கண்விழித்தாள்.

அதற்குள் அங்கு வந்து சேர்ந்த அவர்களது உறவினர்களால் எல்லாக் காரியமும் நடந்து முடிந்துவிட்டது.

கண்விழித்த சாந்தி, மலங்க மலங்க விழித்தபடி, "என்ர குஞ்சுகளா! இன்றைக்கு நேரத்துக்குப் பள்ளிக்கூடத்தால் வரவேண்டும். அப்பா! உங்களுக்கும்தான் இன்றைக்கு எங்கட கலியாணநாள் என்பதை மறந்துவிடாதீங்க" எனச் சொல்லத் தொடங்கியபடி எழும்பி அங்குமிங்கும் நடக்கத் தொடங்கினாள். அப்பொழுதுதான் அவள் சுயநினைவை இழந்து சித்தப்பிரமை அடைந்துவிட்டாள் என்பது தெரியவந்தது.

அவளை தாம் பராமரிப்பதாகக் கூறிக்கொண்டு வந்த சில நெருங்கிய உறவினர் களும் ஏதோ கொஞ்ச நாட்கள் அவளைப் பராமரிப்பதாகச் சாக்குப்போக்குக் காட்டி, ஒரு வருடத்திற்குள்ளேயே அவளது உடமைகள், சொத்துக்களையும் அபகரித்து, கடைசியில் அவள் பிதற்றியவண்ணம் தெருவீதிகளில் அலையும் நிலைக்கு ஆளாக்கிவிட்டனர்.

இதுதான் சாந்தியின் இன்றையநிலை. உருக்குலைந்தவளாய், சிதைந்த ஓவியமாய், கண்ணீர்க் காவியமாய் அலைந்து திரியும் அவளது வாழ்விற்கு யார் காரணம்?

காலஞ்செய்த கோலமா? கடவுள் செய்த குற்றமா?

# அன்பு என்றால்

பத்தி எழுத்து

சு. சிறி நந்தகுமார்

அவன் மேல்மாடி நிலா முற்றத்தில் இருந்து, அந்த அந்திமாலைப் பொழுதில் சிந்தனைக் குதிரையைத் தட்டி விடுகிறான். இவன் ஒரு சம்சாரி, மனைவி, இருபிள்ளைகள். மூத்தவன் தனியார் நிறுவனம் ஒன்றில் வேலை செய்கிறான். இளையவன் பல்கலைக் கழகத்தில் வர்த்தகம் கற்கிறான்.

இந்த சிந்தனையாளனுக்கு ஒன்று முழுதாகத் தெரிந்தாகவேண்டும். திருமணமாகி வெள்ளிவிழாக்கண்டபின்பும்அன்புஎன்றால்.... இதுதான்என்றுஎல்லைக்கோடுபோடஅவனால் முடியவில்லை. உண்மையான அன்பு, பாசம் என்பவற்றைப் புரிந்துகொள்வதில் அவனுக்கு நாட்டமோ, நேரமோ இருப்பதில்லையென்று அவன் மனைவி அடிக்கடி சொல்வதை அவன் சுகவீனமுற்று ஓய்வெடுத்துக் கொண்டபோதில் மட்டும் நினைத்துப் பார்ப்பதுண்டு.

அன்பு என்பது ஓர் உணர்வு. ஓர் உயிர்க்கும் இன்னொரு உயிர்க்கும் இடையிலுள்ள இணைப்புப் பாலம். இது தாய்ப் பாசம், சகோதரபாசம், காதல் தெய்வீக அன்பு (prema) எனும் பலவகைப் பரிமாணங்களில் பேசப்பட்டாலும் பொதுவில் அன்பு எனும் ஒரு மனித உணர்வு வெளிப்பாட்டின் வெவ்வேறு தோற்றங்களேயாகும்.

இவ்வுணர்வு எல்லோரையும் உயிர்த் துடிப்புடன் வாழவைக்கும் ஒரு சக்தியின் வெளிப்பாடு. ஒரு நீண்ட இராஜ பாதையென்பது அவன் நிலைப்பாடு. இந்த நீண்ட சிவப்புக் கம்பளத்தின் முடிவைக் கண்டவர்கள் எவ்வளவு பேர் என்று எண்ணத்தோன்றுகிறது. உயிர்களின் தோற்றத்திற்கு ஓர் அடிப்படைக் காரணம் இருக்க வேண்டும். அது ஓர் அன்பு என்னும் உணர்வை அதன் நிரந்தர மகிழ்ச்சி நிலையை (Bliss state) அதன் மூலமாக உயிர்கள் பெறும் புத்துணர்வை, எல்லாம் வல்ல ஒரு சக்திக்கும், அதன் தோற்றப்பாடான உயிர்களுக்கும் இடையில் உள்ள ஒரு பிணைப்பை புரிந்துகொள்ளத்தான் இது உருவானதோ என்று அவன் சிந்திப்பதுண்டு.

ஆனால் இந்த அன்பு சுயநல அன்பாக (selfish-love) இருக்க முடியுமா? அவ்வாறெனில் அது அன்பாகமுடியுமா? அல்லது இது எப்போதும் தெய்வீக அன்பாகத்தான் இருக்கவேண்டுமா? இவன் பலவேளை இவற்றை எண்ணிக் குழம்பியதுண்டு.

எவரொருவர் ஒரு அழகான கவிதையை அற்புதமான முறையில் வெளிக்கொணர்ந்தாலும், அதை வடிப்பவரின் எண்ணம் தூய்மையற்றதாக இருப்பின் அதன் தாக்கம் அவனுக்கோ, அல்லது பிறருக்கோ பசுமையைத்தராது. என்று அனுபவத்தில் உணர்ந்தவன் இவன்.

இவனைப் பொறுத்தவரை அன்பு பலவித தோற்றங்களின்நிலையாத்தன்மையினையும், ஒன்றேயான உண்மைத் தோற்றத்தினையும் அடையாளம் காண உதவுகின்றது.

ஒரு போது இவன் சில பாடங்களை தமிழ் வகுப்பிற்காக எடுக்க வேண்டி வந்தது. அப்போது உலகம் என்பது ஒரு வயற்காடு., அன்பை விளைப்பதற்கும், அறுவடை செய்வதற்கும், உரிய நிலக்களம். பூமியென்பது உணர்வுகளின் ஒரு போராட்டம் நல்லவையும் தீயனவும் நடிக்கும் ஒரு நாடக மேடை. என்று சொன்னபோது அச் சிறுவர்கள் அதன் உள் அர்த்தம் புரியாது மிரண்டு பார்த்தது நினைவுக்கு வருகிறது.

அன்பு பல பயிர்களாக எம் இதயத்தில் விதைக்கப்படலாம். இந்த அன்பை எவ்வாறு வளப்படுத்துவது? அதற்கு எமது இதயங்களைச் சுற்றியிருக்கும் அளவுக்கு மிஞ்சிய ஆசை எனும் காளான்களை அகற்ற வேண்டுமென்றும், இதயமானது எல்லோரையும் சம தோழமையுடன் ஏற்கும் நடுநிலையினை அடையவேண்டுமென்றும், யாரோ ஆன்மீகவாதி சொன்னது அவனால் முழுமையாக ஏற்றுக் கொள்ளக் கூடிய நியாயமாகப் படவில்லை.

பல சந்தர்ப்பங்களில், பல மனிதரிடையே சில சுயநல ஆசைகளுக்கும் இலட்சியங்களுக்கும்தான் அன்பு எனும் இணைப்புப்பாலம் பயன்படுத்தப்படுகின்றது என்பது இவன் கணிப்பு. ஒருவன் தான் பலவீனமாக, அல்லது நோய்வாய்ப்பட்டு இருக்கும்போது, அவன் தன்னை நேசிக்கும் தன்மையற்றவனாயிருந்தால் எவ்வாறு அவன் தேறி மற்றவர்களுக்குப் பயனுள்ளவனாக முடியும்?

ஓரளவு சுயநலம் கருதினால் தானே பிறர் நலம் காக்கும் தகுதியும் அவனுள் ஏற்படமுடியும்!.

வீதியில் எதிர்பாராமல், முன் பின் தெரியாத ஓர் ஊனமுற்றவர் தன் கைத்தடி கொண்டு மறுபக்கத்தை அடைய காலடி எடுத்து வைக்கிறார். ஏதோ ஒரு உந்துதலால் அவருடன் கூடச் சென்று அவரைப் பக்குவமாக மறுகரையை அடைய உதவுகிறான் ஒருவன்.

இதுதானா சுயனலமற்ற அன்பு எனப்படுவது? சகல சீவராசிகளிடையே, தகுதி வேறுபாடின்றி தோன்றும் இந்த சக்தி நம்மில் நாமே நம்பிக்கையை (தன் நம்பிக்கை-self confidence) சுய நிர்ணயத்தை(self determination) வளர்த்துக் கொண்டால் இயல்பாகத் தோன்றிவிடும்.

ஆகவே, இந்த அன்பை நடைமுறைப் படுத்த சில முயற்சிகளை நாம் எடுக்கவேண்டுமென்ற முடிவுக்கு அவன் பல தடவை வந்திருந்தும், நடைமுறையில் கொண்டுவருவது கடினமாகத் தானிருக்கிறது.

பயத்தினாலோ அல்லது அச்சச் சூழ்நிலையிலோ உருவாகும் அன்பு எவ்வாறு நிலையானதாக முடியும்.? தெளிவான உள்ளத்தில், பயமின்றி தன்னம்பிக்கையுடன் உருவாகும் அன்பு நிலையானதென்று வாழ்க்கையின் முதிய காலங்களில் அவனால் உணரமுடிகிறது.

இருந்தும் அவன் மனையாள் இன்னும் இவனுக்கு அன்பு செலுத்தத் தெரியவில்லை என்று இடையிடையே கூறுவது இவன் பிறரிடம் கூடிய அன்பு காட்டிவிடுவானென்ற அவள் பயம் தானென்று இவனுக்குப் புரிந்தாலும், அன்பை வெளிப்படுத்த போலி வார்த்தைகளைச் சொல்ல அவன் சுயதர்மம் இடம் கொடுப்பதில்லை.

அன்பு என்பது, உண்மை, தர்மம், அமைதி, கருணை என்னும் அடிப்படை மனித நற்குணங்களில் இருந்து உருவான உத்தமமான விதை. அதற்கு போலி ஓடோ அல்லது பொய் மூடியோ தேவையில்லை. உண்மையான தெய்வீக அன்பை (prema)

நம்புபவன் அவன். அதை எப்போது தான் அவன் மனைவி புரிந்து கொள்வாளோ!

பொதுநலச் சேவை என்பது அன்பின் ஒரு செயல்முறைத் தேவையாகும்.

சுயநலமற்ற பொதுச் சேவைகள், மனிதக் குழுக்கழுக்கிடையேயும், பலவித மனித பண்பாட்டு இனங்களிடையேயும், வேற்றுக் கொள்கைகள் கொண்ட நாடுகளிடையேயும் அன்பு எனும் பொதுவான இணைப்பை ஏற்படுத்துகிறதென்பதில் திடமான தெளிவு டையவன் எம் சம்சாரி.

இந்தப் பொது நலச் சேவை, பலவித வடிவங்களை எடுக்கும் அன்பு எனும் ஆலமரத்தின் பல விழுதுகளேயாகும். சில குறுகிய உறவுகளுக்குள் அன்பு எனும் அட்சய பாத்திரம் அடங்கிவிடக் கூடாதெனும் தெளிவுதான் குடும்ப வாழ்க்கையில், கூடிய அன்பு வெளிக்காட்டலை அவன் காட்டாததன் காரணமோ.... அவனுக்குத்தான் அது தெரியும்!